Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 25 (16.05.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:227

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல்,மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்ப்பாணம்.



- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2494)

# கண்ணிவெடி ஒழிப்பு உடன்படிக்கையில்;

# அரசை கையெழுத்திட வலியுறுத்துங்கள்!

## உதவி வழங்கும் நாடுகளிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

**இலங்கை அரசுக்கு உதவி வழங்கும் நாடுகளும் மற்றும் சர்வதேச தொண்டர் அமைப்புக்களும் கண்ணிவெடிப் பயன்பாட்டுக்கு எதிரான 'ஒட்டாவா' உடன்படிக்கையில் இலங்கை அரசை கைச்சாத்திட நிர்ப்பந்திக்க வேண்டுமென யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் இணையப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கண்ணிவெடிகள் பயன்பாட்டுக்கு எதிரான சர்வமத குழுப்பிரதிநிதிகள் கலந்துகொண்ட கண்ணிவெடிகள் தொடர்பான பயிற்சிப்பட்டறையின் போதே இந்தக் கோரிக்கையை அவர்கள் விடுத்தனர்.

வண.அஸஜிதேரர், மௌலவி. சுபியான், இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் சு.மகேஸ்வரக் குருக்கள் மற்றும் வண.பிதா.பிரெட்றிக் ஆகியோர் சர்வமதக் குழுவின் சார்பில் கலந்துகொண்டனர்.

நல்லூரிலுள்ள 'எயுரோவில்' மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப்பட்டறையில் மனிதநேய அமைப்புக்களான கியூடெக் நிறுவனத்தின் சார்பில் வணபிதா. ஏ.ஜெயக்குமார் மற்றும் சீ.வி.கே.சிவஞானம், சு.பரமநாதன், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், தமிழர் ஆசிரிய சங்கத்தைச் சேர்ந்த அ.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கூட்டமைப்பு எம்.பியாக அரியநேந்திரம் பதவியேற்பார்!

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக பாக்கியராஜா அரியநேந்திரம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான கிங்ஸ்லி இராசநாயகம் தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.

இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட அரியநேந்திரம் நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்யுவுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மூவர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக எதிர்வரும்18 ஆம்திகதி சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய மக்கள் சுதந்திரக கூட்டமைப்பின் சார்பாக தேசியப்பட்டியில் தெரிவுசெய்யப்பட்ட மூவர் இராஜினாமா செய்திருந்தமை தெரிந்ததே.

## அமெரிக்க உதவியுடனான செயற்திட்டம் திருமலையில் றொக்கா பார்வையிட்டார்

அமெரிக்க அரசின் 8.91மில்லியன் ரூபா பெறுமதியான உதவித் திட்டங்களை பார்வையிடுவதற்கும், ஆரம்பித்து வைப்பதற்குமாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் கிறிஸ்ரீனா றொக்கா நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

சமூக அபிவிருத்திக்கான உதவி வழங்கும் அமெரிக்க நிறுவனமான யு.எஸ்.எயிட் அமைப்பின் ஊடாக திருகோணமலையில் நடைமுறைப் படுத்தப்படும் மூன்று முக்கிய செயற்றிட்டங்களை கிறிஸ்ரீனா றொக்கா பார்வையிட்டார்.

அண்மையில் திருகோணமலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்து ஆராய

## நேற்றிரவு கொழும்புக்கு வந்த அகாஷி நாளை மறுநாள் புலிகளுடன் பேசுவார்



சமாதான முயற்சிகளை மீள

யசுஷி அகாஷி நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

நேற்றிரவு 7 மணிக்கு கட்டுநாயக்கா வந்தடைந்த அகாஷி ஐந்து நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார்.

இந்தக் காலப்பகுதியில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளதாக ஜப்பானிய தூதரகம் அறிவித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களின் நிகழ்ச்சி நிரல் அதிகாரபூர்வமற்ற பேச்சில்!

### அரச தரப்புத் தகவல்

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உத்தியோகபூர்வ பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கு இரு பகுதியினருக்கும் இடையில் அதிகார பூர்வமற்ற பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக

தெரிவித்தது.

இரு பகுதியினருக்கும் இடையிலான அதிகாரபூர்வமற்ற பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான நேரம், இடம், திகதி என்பனவற்றை அனுசரணையாளரான நோர்வே விரைவில் அறிவிக்கவுள்ளதாக அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## இலங்கை சமாதான முயற்சிகளுக்கு

## புதிய இந்திய அரசு ஒத்துழைக்குமாறு மலையக மக்கள் முன்னணி கோரிக்கை!

இலங்கையின் சமாதான முயற் குழுவொன்று இந்தியா சென்றுள்

பூர்வ பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கு இரு பகுதியினருக்கும் இடையில் அதிகார பூர்வமற்ற பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி நேற்றிரவு வெளியிடப்பட்ட இணையத்தளச் செய்தியொன்று

நேரம், இடம், திகதி என்பனவற்றை அனுசரணையாளரான நோர்வே விரைவில் அறிவிக்கவுள்ளதாக அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துடனான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சில உடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)



சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது குறித்து அராய்வதற்காக ஜப்பானின் விஷேட தூதுவர்

# புதிய இந்திய அரசு ஒத்துழைக்குமாறு மலையக மக்கள் முன்னணி கோரிக்கை!

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, இந்தியாவில் புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ள காங்கிரஸ் கட்சியினரிடம் வலியுறுத்துமாறு திராவிட முன்னேற்றக் கழகத்தை மலையக மக்கள் முன்னணி கோரவுள்ளது.

இதனை வலியுறுத்துவதற்காக மலையக மக்கள் முன்னணியின் குழுவொன்று இந்தியா சென்றுள்ளது. மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தலைமையிலான குழுவினரே இந்தியாவிற்கு சென்றுள்ளனர்.

இதற்கு முன்னோடியாக தமிழக முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்டவர்களின்

# 19ஆவது ஆண்டு நினைவு நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(நெடுந்தீவு)

குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்ட 35 பொதுமக்களின் 19 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று நெடுந்தீவில் மிகவும் உணர்வு பூர்வமாக இடம் பெற்றது,.

நெடுந்தீவு மத்தியில் அமைந்துள்ள மாவீரர் நினைவுச் சுடர்ப் பகுதியில் காலை 10.00 மணிக்கு நினைவு நாள் ஊர்வலம் ஆரம்பமாகியது.

பிரதான வீதி வழியாக மாவிலித் துறைமுகத்தை வந்தடைந்த இந்த ஊர்வலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலதரப்பட்டோர் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இதேவேளை நேற்று நடைபெற இருந்த படுகொலையைச் சித்தரிக்கும் வகையிலான ஊர்திப் பவனிக்கு பொலிஸார் தடை விதித்தமையால் அந்த ஊர்திப் பவனி நடைபெறவில்லை.

மாவிலித் துறைமுகத்தில் அமைந்துள்ள நினைவாலயப் பகுதியில் அமைக்கப்பட்ட பொதுச்சுடரினை யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து கடலில் குமுதினிப் படகு வடிவிலே அமைக்கப்பட்ட நினைவுச் சுடரினை படுகொலை செய்யப்பட்ட 8 மாத குழந்தையின் தாயாரான வி.அன்னலட்சுமி ஏற்றிவைத்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் அந்நாட்டு வெளியுறவுச் செயலர் கொலின் பவலைச் சந்தித்த போது..


பதிப்புலக வேந்தர்களே!

நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்

நிலா பதிப்பகம்

சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும்(COLOUR SEPARATION) சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.



PCC COLOUR DIGITAL PRINTER

- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE




பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

## மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு
# தெரிவான மாணவர்களின் விபரங்களை
# யாழ்.பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை யாழ்.பல்லைக்கழக விஞ்ஞானபீடம் வெளியிட்டுள்ளது.

அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு -

ரி.தவரட்ணம் (காரைநகர்), பி. தயாளன் (பருத்தித்துறை), கே.பரமேஸ்வரன் (கரவெட்டி), கே. பிரபாலோஜினி (கொடிகாமம்), ஏ. சிவந்தினி (மயிலிட்டி), ஆர். சிவதர்சினி (தம்பாலை), எம். பிரதீஸ் ( மந்துவில்), ரி. கலையமுதன் (தொண்டைமானாறு), எஸ். நியூட்டன் (குருநகர்), வி. சிவதரன் (குப்பிளான்).

எஸ்.அல்பன் வசந்தகுமார் (கல்வியங்காடு), கோ. ஒபெக்கா(மண்டைதீவு), ரி. விக்கினேஸ்வரன் (தனங்கிளப்பு), எக்ஸ்வியர் சுவினஸ் (குருநகர்), வி. நிரஞ்சன் (சுண்டுக்குளி), ஏ. பிரேமதாஸ் (மாதகல்), பி.திருவாரூரன் (நயினாதீவு), எஸ். சோமச்சந்திரன் (பருத்தித்துறை), வி.ரமணாசுதன் (தொண்டைமானாறு) ஜே. ஜெகதீஸ்வரி (உடுப்பிட்டி).

கே. சுதர்சினி (கரவெட்டி), என். அ்யரஞ்சினி (தாளையடி), பி. மாலதி (கரணவாய் தெற்கு), என்.வதனராணி (துன்னாலை கிழக்கு), ரி. டேவிட் (அக்கராயன்), கே. பிரபாநந்தினி (குடத்தனை மேற்கு), ரி. வக்சலா (சாவகச்சேரி), எஸ். இளங்கோவன் (உரும்பிராய் கிழக்கு), எஸ். டனோசன் புஸ்பகரன் (சில்லாலை தெற்கு), என்.நந்தினி (இடைக்காடு).

எம்.சுசுந்தி (குடத்தனை மேற்கு), எம்.ஜென்சி (புலோலி தெற்கு), எஸ். சங்கர் (திருகோணமலை), ஏ.எம். ஜெனோபா முரினி (பருத்தித்துறை), ஏ.மேரி ராதிகா (பருத்தித்துறை), வி.விஜிதா (வேலணை மேற்கு), வ. சிறிதரன் (கனகபுரம்), வி.மன்மதகுமார் (ஆழியவளை உப-அஞ்சல் அலுவலகம்), எம்.நீதன் (இமையாணன் மேற்கு), எஸ்.வீரசுதாகரன் (மீசாலை கிழக்கு).

ரி.ரூபரஞ்சன் (உடுப்பிட்டி), ரி.கபிசீலன் (இமையாணன் கிழக்கு), ஆர். சுகந்தினி (சுன்னாகம் வடக்கு), கே. கல்யாணி (கலட்டி, யாழ்ப்பாணம்), ஏ.பிரகலாதன் (கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்துறை), ஜி.வத்சலா (புளியங்கூடல் வடக்கு), வி.விமலராஜா (5ஆம் வட்டாரம், நயினாதீவு), எஸ். ரஜினிகாந்த் (கூவில்புலோலி), கே. அருணகிரிநாதன் (5ஆம் வட்டாரம், தாளையடி),

கே.காந்தரூபன் (முரசுமோட்டை), வை.கோகுலன் (விசுவமடு), ஆர். பிரேமலதா (உடுத்துறை வடக்கு), எஸ்.சசிகலா (8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு), பி.வாசுகி (நாகர் கோவில்), ரி.சம்சிதி (அராலி), எஸ். சஜிகுமார் (7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு), கே.கருணேஸ்வரி (துணுக்காய்), ஆர்.யூடிலெவல் (வங்காலை), ஏ.யூடிபுனிதராஜா (முருங்கன்), [illegible]செல்வன் சிறன்ரன் நானாட்டான்).

தெரிவான அனைத்து மாணவர்களும் எதிர்வரும் 24 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - விரிவுரைகள் அனைத்தும் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகுமென விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தெரிவித்தார்

## அமரர் கனகநாயகத்தின் 100ஆவதுஅகவை விழா

(யாழ்ப்பாணம்)

அமரர் எஸ்.ஆர்.கனகநாயகத்தின் 100 ஆவது அகவை நிறைவு விழா இன்று மாலை 3.30 மணிக்கு முத்துத்தம்பி மகாவித்தியாலய சுப்பிரமணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ வித்தியவிருத்திச் சங்கத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையகத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், எஸ்.சிவஞானம், யாழ். வல யக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், பேராசிரியர் வை.பரமேஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

## நெல்லியடியில் திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி-நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற ஆதரவுடன் இன்று பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் ஜானகி விஸ்வநாதன் இயக்கிய 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்னும் முழு நீளத்திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இந்தநிகழ்வின் முடிவில் இடம்பெறும் விமர்சனம் மற்றும் கலந்துரையாடலில் இயக்குநர் ஞானரதன், ஐ.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.


ராஜா யாழ்ப்பாணம்.
5 ஆவது கடைசி வாரம்
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த
கில்லி



காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)
21 ஆம் திகதி முதல்
ஆயுதஎழுத்து
(சி-2387)


## யாழ். கல்வியியற் கல்லூரி
# விரிவுரையாளர்களுக்குப் பெரும் பற்றாக்குறை கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது!
## பீடாதிபதி கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவி வருவதனால், இங்கு பயிற்சி பெற்றுவரும் ஆசிரிய மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக கல்லூரியின் பீடாதிபதி கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் 48 விரிவுரையாளர்கள் கடமையாற்ற வேண்டிய இந்தக் கல்லூரியில் 27 விரிவுரையாளர்கள் மாத்திரமே பணியாற்றி வருகின்றனர். இவர்களில் மூவர் மாத்திரமே நிரந்தர நியமனம் பெற்றவர்கள் ஆவார்.

மேலும், இந்தக் கல்லூரியில் பதிவாளர், எழுதுவினைஞர், சிற்றூழியர், பொறியியலாளர் போன்ற வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரபப்பப்படாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (122)

# கிணற்றில் விழுந்து இளைஞர் மரணம்

(ஆழியவளை)

பாதுகாப்பற்ற கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தபோது தவறி கிணற்றுக்குள் வீழ்ந்த இளைஞர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

கடந்த புதன்கிழமை மல்லாவியில் இட்டம்மா குடியிருப்பில் நடைபெற்ற இந்தச்சம்பவத்தில் அங்கு வசிக்கின்ற கணேஸ்வானரூபன் (வயது -27) என்ற வாலிபனே இறந்தவராவார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த இவர் 1995 ஆம் ஆண்டு முதல் இடம் பெயர்ந்து மல்லாவியில் வசித்து வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (122)


The Royal College
மாணவர்களே ஆங்கிலத்தில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுகின்றீர்களா? கவலை வேண்டாம்.
Spoken English, Grammar.
By - விக்கினேஸ்வரன் ஆச்சாரி,
426 (302) K.K.S வீதி,
யாழ்ப்பாணம். (சி-2490)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், சிநேகா, நாசர் நடித்த
வசீகரா
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
ஜேம்ஸ் பொண்ட் 007 நடித்த
The World is not enough
(சி-2386)

நாகம்ஸ் சுன்னாகம்
3 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா,
கபாலி, வடிவேலு
நடித்த



அருள்
(றீல்ஸ்)
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி


# பணிநிலை வேண்டுகை

**ஆயப்பகுதியிற் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தன் வரலாற்றுச் சான்றிதழ்களுடன் 2004.05.18 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடுவப்பணியகத்திற்கு சமுகம் தரவும்.**

## பணிநிலை:-

### 01. ஆய உதவியாளர் (புளியங்குளம்)

**கல்வித் தகைமை:**
க.பொ.த (சா/த) இல் 04 பாடங்களில் சித்தி.
**சம்பள அளவுத்திட்டம்:**

$$\frac{3080 - 4180}{10x110} + 2000$$

### 02. ஆய அலுவலர் (புளியங்குளம்)

**கல்வித் தகைமை:**
க.பொ.த (உ/த) இல் 03 பாடங்களில் சித்தி.
**சம்பள அளவுத்திட்டம்:**

$$\frac{3630 - 4730}{10x110} + 2000$$

### 03. உள்ளகக் கணக்காய்வாளர் (புளியங்குளம்)

**கல்வித் தகைமை:**
க.பொ.த (உ/த) இல் வர்த்தகப்பிரிவில் சித்தி.
**சம்பள அளவுத்திட்டம்:**

பயிலுநர் 3000+2000

### 04. எரிபொருட் களஞ்சியக் காப்பாளர்

**கல்வித் தகைமை:**
க.பொ.த (உ/த) இல் சித்தியடைந்திருத்தல்.
அல்லது க.பொ.த (சா/த)உடன் 02 ஆண்டுப் பணிப்பட்டறிவு.
**சம்பள அளவுத்திட்டம்:**

பயிலுநர் 3000+2000

### 05. வரவேற்பாளர்

**கல்வித் தகைமை:**
க.பொ.த (உ/த) இல் 03 பாடங்களில் சித்தி(ஆங்கில அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது).
**சம்பள அளவுத்திட்டம்:**

$$\frac{3300 - 4300}{10x100} + 2000$$

### 06. மொழிபெயர்ப்பாளர்

**கல்வித் தகைமை:**
க.பொ.த (சா/த) உடன் சிங்கள, ஆங்கில மொழிகள் எழுத, வாசிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். சம்பளம் தகைமைக்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.

(சி/2526)

## சமாதானப் பேச்சில் பங்கேற்கவுள்ள அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகள் விவரம்!

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசதரப்பிலிருந்து பங்குபற்றும் பிரதிநிதிகளை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

நிதி அமைச்சர் சரத் அமுனுகம அரச பேச்சுவார்த்தைக் குழுவிற்குத் தலைமை தாங்குவார். அவருடன் பிரபல இராஜதந்திரியும், அரசின் சமாதான செயலக செயலாளர் நாயகமுமான ஜயந்த தனபால, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எச்.சுஹைர், சட்ட அறிஞர் ஜம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் பங்குகொள்வர்.

நிதியமைச்சர் சரத் அமுனுகம தலைமையிலான மேற்படி குழு விரைவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்திக்கும் எனவும், புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தக் குழு பங்குபற்றுவது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் சில தினங்களுக்குள் வெளியிடப்படும் எனவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளராக ஹரீம் பீரிஸ் நியமனம்

### ஜனாதிபதியின் பேச்சாளராகவும் தொடர்ந்து இருப்பார்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலக ஊடகப் பேச்சாளரான ஹரீம் பீரிஸ் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியமர்வு அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் இந்த அமைச்சில் முன்னர் தனித்தியங்கிய வன்னி அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த அமைச்சு மூலம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர வைத்தல், அவர்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளல் என்பவற்றுடன் போரினால் அழிவடைந்த இடங்களை புனரமைப்புச் செய்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஜனாதிபதி செயலக ஊடகப் பேச்சாளராக ஹரீம் பீரிஸ் தொடர்ந்து இருப்பாரெனவும், புனர்வாழ்வு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் பதவி அவருக்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதானம், நல்லிணக்கத்துக்கான தேசிய பேரவை அமைக்கத் தீர்மானம்!

(கொழும்பு)

சமாதானத்திற்கும், நல்லிணக்கத்துக்குமான தேசிய பேரவை ஒன்றினை அமைக்க ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் செயற்படவுள்ள இவ்வமைப்பு சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அரசாங்கத்தின் திட்டங்களை ஒருங்கிணைக்கும் நிறுவன ரீதியான உயர் பீடமாக அமையும் என ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வமைப்பு அனைத்து பங்குதாரர்களின் பங்களிப்புடன் சமாதானம் பற்றிய கொள்கை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றிற்கு பொறுப்புடையதாக விளங்கும்.

அத்துடன், சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான தேசியப் பேரவையானது போர்நிறுத்த உடன்படிக்கையுடன் தொடர்புபட்ட சகல விதமான விடயங்களையும் ஒருங்கிணைக்கும் அமைப்பாகவும் செயற்படவுள்ளது.

விடுதலைப் புலிகள் மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய தமிழ், முஸ்லிம் அமைப்புக்கள், படைத்தரப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட விடயங்களையும் இவ்வமைப்பு கையாளுமென ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரோந்து சென்ற படையினர் மீது மட்டக்களப்பில் கிரனைட் வீச்சு!

### நான்கு பேர் காயமடைந்தனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - புத்தூர் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் இடம்பெற்ற கிரனைட் வீச்சுத் தாக்குதலில் நான்கு படையினர் படுகாயமடைந்தனர்.

ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் சம்பவம், புத்தூர் விபுலானந்த வீதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த 3 இராணுவத்தினரும், ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாக மட்டக்களப்பு பொலிஸ் தலைமை அலுவலகம் தெரிவித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டின் ஆரம்பம் முதல் இதுவரை 12 சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் இவற்றில் 14 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 1983 ஆம் ஆண்டே இலங்கை வந்துள்ளாராம் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல்

(கொழும்பு)

அமெரிக்காவின் தற்போதைய இராஜாங்கச் செயலாளராக இருக்கும் கொலின் பவல் 1983 ஆம் ஆண்டே இலங்கை வந்துள்ளாராம்.

இலங்கையின் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அழைப்பின் பேரில் இலங்கை வந்த அமெரிக்காவின் அப்போதைய பாதுகாப்புச் செயலரான கஸ்பர்வேயின்பேஜருடன், அமெரிக்க இராணுவத்தில் லெப். கேணல் அதிகாரியாக இருந்த கொலன் பவலும் கூடவே வந்தார்.

1983 ஆம் ஆண்டு இலங்கை வந்த கொலின் பவல், ஜனாதிபதி மாளிகையில் நின்ற பாரிய ஆலமரத்தை இன்றும் மறக்காமல் நினைவு வைத்துள்ளாராம். இதனாலேயே 2001 ஆம் ஆண்டு லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்கா சென்றபோது அவரிடம் அந்த ஆலமரத்தைப் பற்றிக் கேட்டுள்ளார்.

இதனையடுத்து ஆலமரத்தின் படங்களை கொலின் பவலுக்கு வழங்கியுள்ளார் கதிர்காமர்.

இதேவேளை - 1983 ஆம் ஆண்டு இலங்கை வந்த கொலின் பவலுடன் தற்போதைய அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜும் இலங்கைக்கு வந்திருந்தார்.

## சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா முழு ஆதரவு!

### அமைச்சர் கதிர்காமரிடம் தெரிவிப்பு

இலங்கையில் இரண்டு தசாப்த காலமாக இடம்பெற்றுவந்த யுத்தத்துக்கு தீர்வுகாணும் வகையில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிக்கு அமெரிக்கா தனது முழுமையான ஆதரவை வழங்குமென வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் மற்றும் பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் இருவருமே லக்ஷ்மன் கதிர்காமரிடம் மேற்கண்டவாறு தெரிவித்ததாக அந்தப் பத்திரிகை வெளியிட்ட செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசாங்கம் சமாதான முயற்சிக்கு முழு ஆதரவையும் வழங்குகின்ற அதேவேளை, அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தடையை நீக்கமுடியாது. அவ்வாறு தடையை நீக்குவதெனில் விடுதலைப் புலிகள் வன்செயல்களைக் கைவிடுவதாக அறிவிக்க வேண்டும் என தெரிவித்ததாக அந்தப் பத்திரிகை மேலும் குறிபிட்டுள்ளது.

## சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற 15 பேர் கட்டுநாயக்கவில் கைது!

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முற்பட்ட 15 பேர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

கட்டுநாயக்க விமானநிலையத்தில் உள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் இவர்களை கைது செய்துள்ளனர்.

பெண் ஒருவர் போலிக்கடவுச் சீட்டுக்களை பெற்றுக்கொடுத்ததாக கைதுசெய்யப்பட்ட நபர்கள் விசாரணையின்போது கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இவர்களை இத்தாலி செல்ல ஏற்பாடு செய்ததாகக் கருதப்படும் பெண் ஒருவரை பொலிஸார் கைதுசெய்முள்ளனர்.

## புலிகளின் தன்னாட்சி அதிகார யோசனை தனி நாட்டுக்கான ஒரு வரைபுத் திட்டமே!

### அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வொஷிங்ரனில் தெரிவிப்பு

புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையானது, எதிர்கால தனிநாட்டிற்கான ஒரு வரைபுத் திட்டமாகும்.

இதனை இறைமையுள்ள ஒரு அரசாங்கம் ஏற்றுக்கொள்வதென்பது மிகவும் கடினமான விடயம் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கதிர்காமர் கடந்த புதன்கிழமையன்று வொஷிங்ரனில் உளள புருக்கிங்ஸ் இன்ஸ்ரிரியூட்டில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

உலகின் பல்வேறு நாடுகளிலும் தொடர்ந்த ஆறு சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், விடுதலைப் புலிகள் விலகிக்கொண்டதை அடுத்து 2003 ஆம் ஆண்டு ஏப்ரலில் பேச்சுவார்த்தை முடிவடைந்தது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்காத நிலையில், பேச்சுக்கள் தொடர்வதென்பது ஒரு வீணான செயல் என விடுதலைப் புலிகளின் தலைவர் ஒருவர் தெரிவித்தா. நிவாரணங்களும் அபிவிருத்திப் பணிகளும் மக்களுக்குக் கிடைக்காத நிலையில் ஆட்சியிலுள்ள அரசு அந்த மக்கள் ஆதரவைத் தக்க வைதது்க்கொள்வதென்பது ஒரு கடினமான பணியாகும்.

இரண்டு தசாப்தகாலமாகத் தொடர்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் பணியாற்றுவோம்.

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனையை முன்வைத்துள்ளனர். இந்த இடைக்கால தன்னாட்சி அதிகார யோசனை இறைமையுள்ள அரசாங்கம் ஒன்றினால் ஏற்றுக்கொள்ள முடியாதொன்றாகும்.

இந்த இடைக்கால தன்னாட்சி வரைபில் - நாடாளுமன்றம் தொடர்பான யோசனைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கணக்காய்வாளர் நாயகமொன்றை தனியாகக் கோருகிறார்கள். மேலும் 2/3 கடற்பரப்பில் 200 மைல் கடல்வலயத்தை வற்புறுத்திக் கேட்கிறார்கள்.

இவ்வாறான கோரிக்கை எதிர்கால தனிநாடு ஒன்றினை உருவாக்கும் திட்டமாகும் என அமைச்சர் கதிர்காமர் கருத்துத் தெரிவித்தார்.




அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள கதிர்காமர், வாசுஷிங்ரனில் உள்ள புருக்கிங்ஸ் இன்ஸ்ரிரியூட்டில் உரையாற்றுகிறார்.

## மாகாண சபைகளுக்கான வேட்பாளர் நியமனம்; சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. இழுபறி!

(கொழும்பு)

மாகாணசபை தேர்தலுக்கான வேட்பாளர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் இழுபறிநிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாணசபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக போட்டியிடவுள்ளன. இந்த நிலையில் மாகாண சபைகள் ஒவ்வொன்றிலும் கூடுதலான வேட்பாளர்களை நிறுத்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என ஜே.வி.பி. கோரியுள்ளது.

ஆனால், ஜே.வி.பியின் கோரிக்கைக்கு இணங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி பின்னடித்து வருகின்றது.

மாகாணசபை தேர்தலுக்கான வேட்பாளர் நியமனம் தொடர்பாக ஆராயவதற்காக கடந்த புதன்கிழமை மாலை ஜனாதிபதி மாளிகையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகாவை ஜே.வி.பி. எம்.பிக்களான நந்தன குணதிலக, விஜித ஹேரத் ஆகியோர் சந்தித்து மாகாணசபைக்கான வேட்பாளர் ஒதுக்கீடு தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர். ஆனால் இந்தக் கலந்துரையாடலில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

வேட்பாளர் நியமனம் தொடர்பில் ஜே.வி.பியுடன் இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னர்தான் மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர்களாக யாரை நியமிப்பது என்பது குறித்து தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

# காங்கிரஸ் எம்.பிக்களால் சோனியா பிரதமராக தெரிவுசெய்யப்பட்டார்!

## 18 ஆம் திகதி பதவியேற்பார்



நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 145 இடங்கள் கிடைத்துள்ளன.

அதன் தலைமையில் அமைந்துள்ள கூட்டணி - மொத்தம் 217 இடங்களைக் கைப்பறறியுள்ளது. இதன் அடிப்படையில் அதிக இடங்களைப் பிடித்த கூட்டணி என்ற அந்தஸ்துடன் ஆட்சி அமைக்கும் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஆட்சி அமைக்க 272 எம்.பிக்கள் ஆதரவு தேவை. காங்கிரஸ் கூட்டணிக்கு அந்தஅளவுக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

என்றாலும், கம்யூனிஸ்ட் கட்சிகள் - கட்சிகளின் ஆதரவுடன் அந்தக் கூட்டணி மத்தியில் ஆட்சியமைக்கவுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு சுமார் 60 எம்.பிக்கள் உள்ளனர். எனவே காங்கிரஸ் கூட்டணியும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் சேர்ந்ததாலே ஆட்சி அமைப்பதற்கான பலம் கிடைத்துள்ளது.

காங்கிரஸ் தலைமையில் அமையும் மந்திரிசபையில் மதசார்பற்ற கட்சிகளையும் சேர்க்கவேண்டும் என்று, இந்திய கம்யூனிஸ்ட் விரும்புகிறது. இதையடுத்து மதசார்பற்ற கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ஹர்கிஷன் சிங் சுர்ஜித் ஈடுபட்டார்.

அலா சமாஜ்வாதிக்கட்சித் தலைவர் முலாயம்சிங், தேசியவாதக் காங்கிரஸ் தலைவர் சரத்பவார், முன்னாள் பிரதமர் வி.பி.சிங், வ.கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் ஏ.பி.பரதன் ஆகியோருடன் பேச்சுநடத்தினார். சோனியாவை பிரதமர் பதவிக்கு ஏற்றுக்கொள்வதாக சரத்பவார் அறிவித்துவிட்டார். மந்திரி சபையில் சேருவது குறித்து இரண்டு நாளில் அறிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

ராஷ்ட்ரீய ஜனதாதள தலைவர் லல்லுப்பிரசாத் நேற்று சோனியாவைச் சந்தித்துப் பேசினார். சோனியாதான் பிரதமர் என்று அவர் ஏற்கனவே அறிவித்துள்ளார். அவர் கட்சி மந்திரி சபையில் இடம்பெறுவது ஏற்கனவே உறுதியாகிவிட்டது.

முலாயம்சிங் யாதவ் தலைமையிலான சமாஜ்வாதிக் கட்சியும், காங்கிரஸ் கூட்டணி அரசில் இடம்பெறுவது என்று, இ.கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் ஹர்கிசன்சிங் சுர்ஜித் நிருபர்களுக்களித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். இதில் முடிவெடுக்கும் முழு அதிகாரத்தை சமாஜ்வாதிக்கட்சி முலாயம்சிங்கிற்கு அளித்திருக்கிறது.

இந்த நிலையில், காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் டெல்கியில் கூடியது. தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரஸ் எம்.பிக்கள் இதில் கலந்துகொண்டனர். தமிழ் நாட்டிலிருந்து வெற்றிபெற்ற எம்.பிக்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நாடாளுமன்ற காங்கிரஸ் தலைவராக (பிரதமர் பதவிக்கு) சோனியா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடாளுமன்ற கட்சித்தலைவர்தான் பிரதமர் பதவிஏற்பது மரபு. அந்தவகையில் சோனியா பிரதமர் பதவியேற்பது உறுதியாகிவிட்டது. காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவராக சோனியா தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவரைப் பிரதமராக ஏற்றுக்கொள்ள இதர கட்சிகள் முறைப்படி ஆதரவு தெரிவிக்கவேண்டும்.

இன்று சோனியா கூட்டணி கட்சித்தலைவர்களுடனும், மதசார்பற்ற ஆதரவுக்கட்சித் தலைவர்களுடனும் ஆலோசனை நடத்துவார்.

16, 17 ஆம் திகதிகளில் காங்கிரஸ் கூட்டணி, இடதுசாரிக் கட்சிகள், மதசார்பற்ற கட்சிகளின் கூட்டம் நடைபெறும்.

இதில் புதிய அரசமைப்பது பற்றி முடிவுசெய்யப்படும். ஆதரவளிக்கும் கட்சிகளின் ஆதரவை முறைப்படி பெற்றபிறகு சோனியா 17 ஆம் திகதி ஜனாதிபதி அப்துல்கலாமைச் சந்தித்து ஆட்சியமைக்க உரிமைகோருவார். ஆட்சியமைக்க அவருக்கு ஜனாதிபதி அழைப்புவிடுத்ததும் 18 ஆம் திகதி சோனியா தலைமையில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி பதவியேற்கும்.

## தோல்வியுற்ற வேட்பாளர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை

ஆந்திர சட்டசபைத் தேர்தலில் தோல்வியடைந்த தெலுங்குதேச வேட்பாளர், துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துள்ளார். ஆந்திர மாநில சட்டசபைக்கு நடந்த தேர்தலில் ஆளும் தெலுங்குதேச கட்சி தோல்வியடைந்தது.

அனந்தபூர் சட்டசபைத் தொகுதியில் தெலுங்குதேசம் கட்சியினர் சார்பில் கே.எம். ரக மத்துல்லா (வயது 30) போட்டியிட்டார்.

தேர்தலில் முதல் தடவையாக போட்டியிட்ட கே.எம்.ரகமத்துல்லா காங்கிரஸ் வேட்பாளர் நாராயண ரெட்டியிடம் 37 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

இந்தத் தோல்வியை ரகமத்துல்லாவால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. நேற்றுமுன்தினம் வீட்டில் படுக்கை அறையில் அவர் திடீரென்று தனது கைத்துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக்கொண்டார். இதனால் ரத்த வெள்ளத்தில் சாய்ந்த அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டு வேலைக்காரி ஓடிச்சென்று பார்த்தபோது ரகமத்துல்லா தற்கொலை செய்துகொணடது தெரியவந்தது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

## காற்றுப்போன நிலையில் ரஜினி என்ற பலூன்!

### வீரமணி தெரிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்குக் கிடைத்துள்ள மகத்தான வெற்றி, கருணாநிதியின் ராஜதந்திர வியூகத்துக்கு கிடைத்த வெற்றி என திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தந்தை பெரியார், அண்ணாவின் பூமியில் காவிக்கறை துடைக்கப்பட்டுவிட்டது. மண்ணின் மானம் காக்கப்பட்டுவிட்டது. ஊடகங்களால் பெரிதாக ஊதப்பட்ட நடிகர் ரஜினியின் நிலை, காற்றுப்போன பலூன் மாதிரி புஸ் என்று ஆகிவிட்டது.

இந்த சாதனையைச் செய்த தமிழக வாக்காளர்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை என்று கூறியுள்ளார் வீரமணி.

## இந்திய செய்திகள்

## ஆண்டவன் அளித்த தீர்ப்பே தி.மு.க வெற்றிக்கு காரணம்!

### ரஜினிகாந் கூறுகிறார்

(சென்னை)

பா.ம.க. உட்பட தி.மு.க. கூட்டணி அனைத்து இடங்களிலும் வென்றது ஆண்டவன் அளித்த தீர்ப்பு என நடிகர் ரஜினிகாந் கூறியுள்ளார்.

தனது ரசிகர் மன்றத் தலைவர் சத்யநாராயண ராவ் மூலமாக ரஜினி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.



அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது - நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற தி.மு.க. கூட்டணிக்கு ரஜினி சார்பாகவும், மன்றங்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்தார்.

பா.ம.கவை பொறுத்தவரை நம் அன்புத் தலைவர் ரஜினி ஏற்கனவே கூறியது போல, அவர்கள் வெற்றிபெற்றால் நாம் தோற்றுவிட்டோம் என்று அர்த்தம் அல்ல. இது ஆண்டவன் அளித்த தீர்ப்பு.

பா.ம.க. போட்யிட்ட 6 தொகுதிகளிலும் கடுமையாக உழைத்த அன்பு ரசிகர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்.

அன்பு ரசிகர்கள், இனி வழக்கம்போல் உங்கள் அன்றாட வேலைகளிலும் குடும்பநலன் காப்பதிலும் உங்கள் கவனத்தை செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சித் தலைவராக அத்வானி தெரிவாவார்



பாரதீய ஜனதா கட்சியின் நடாளுமன்ற குழுக்கூட்டம் நேற்று முன்தினம் டெல்கியில் நடைபெற்றது. அகில இந்திய தலைவர் வெங்கையா நாயுடு தலைமை தாங்கினார். கூட்டம் முடிந்ததும் அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அவர் கூறும்போது - பாரதீய ஜனதா கட்சி எம்.பிக்கள் கூட்டம் இன்னும் ஒரு சில நாட்களில் நடைபெறும். அப்போது நாடாளுமன்ற பாரதீய ஜனதா கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று கூறினார்.

பிரதமர் பதவியில் இருந்த வாஜ்பாய் நாடாளுமன்ற பா.ஜனதா கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவாரா? என்று நிருபர்கள் கேட்டதற்கு வெங்கையா நாயுடு பதில் எதுவும் சொல்லவில்லை.

ஆனால், மூத்த பாரதீய ஜனதா கட்சி தலைவர் ஒருவர் கூறும்போது - வாஜ்பாய்க்கு முன்னாள் பிரதமர் என்ற அடிப்படையில் அரசு பங்களா, கார் மற்றும் அனைத்து வசதிகளும் கிடைக்கும். அதனால் வாஜ்பாய் தொடர்ந்து அரசு மரியாதையுடன் இருப்பார்.

நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவருக்கும் அரசு பங்களா, அரசு கார்கள் மற்றும் பல வசதிகள் உண்டு. அத்துடன் மத்திய மந்திரி அந்தஸ்தும் உண்டு. இதனால் துணை பிரதமராக இருந்த எல்.கே. அத்வானிக்கு நாடாளுமன்ற எதிர்க்கட்சிதலைவர் பதவியை கொடுக்கலாம் என்ற கருத்து கடைசியில் இருக்கிறது என்று அவர் கூறினார். இந்த பிரச்சினை குறித்து பாரதீய ஜனதா நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அத்வானிக்கு எதிர்க்கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவார் என்று கூறப்படுகின்றது.

## இந்தியாவிலேயே இளம் வயது எம்.பி.



இந்தியாவிலேயே இளம் வயது நாடாளுமன்ற உறுப்பினராக 27 வயதான மிலிண்ட் தோரா தெரிவாகியுள்ளார்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றவர்களில் மிகவும் இளம் வயதுக்காரர் மிலிண்ட் தோரா. இவர் மும்பை தெற்கு நாடாளுமன்ற தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறார்.

## சோனியா பிரதமராக ம.தி.மு.க ஆதரவு!

### அமைச்சரவையில் சேராதாம்

மத்தியில் அமையும் காங்கிரஸ் ஆட்சியை ம.தி.மு.க வெளியில் இருந்து ஆதரிக்கும் என வைகோ அறிவித்துள்ளார். கூட்டணியில் இருந்தாலும் மத்திய அமைச்சரவையில் சேரமாட்டோம் என அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

ம.தி.மு.கவின் உயர்நிலைக்குழுக் கூட்டத்தின் முடிவில் இருந்து முடிவை அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது- நாடாளுமன்றத்தில் ஆளும் கூட்டணி வரிசையில் அமர்வோம். ஆனால், அமைச்சரவையில் ம.தி.மு.க சேராது. ஆட்சிக்கு வரும் புதிய அரசு பொடா சட்டத்தை உடனடியாக நீக்கும் என நம்புகிறேன்.

சோனியா காந்தி பிரதமராவதை ம.தி.மு.க வரவேற்கிறது. அதில் எங்களுக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை.

கூட்டணி ஆட்சி நடத்துவதற்காக குறைந்தபட்ச செயல்திட்டத்தை காங்கிரஸ் உருவாக்கி வருகிறது. அதில் ம.தி.மு.கவின் கருத்துக்களையும் இடம்பெறச்செய்யும் வகையில் எங்களது தேர்தல் அறிக்கையை அனுப்பிவைப்போம் என்றார் வைகோ.

## ஆகக்கூடிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்ற வேட்பாளர்!

இந்தியாவிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றவர் என்ற பெருமையை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அனில்பாசு பெற்றுள்ளார். இவர் 5 லட்சத்து 92 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

அனில்பாசு மேற்கு வங்காள மாநில ஆரம்ப நாடாளுமன்ற தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து பாரதீய ஜனதா சார்பில் சுவாபன் குமார் நந்தியும், காங்கிரஸ் சார்பில் தத்தா பிரதீப்பும் போட்டியிட்டனர்.

மும்முனைப் போட்டி நிலவிய இந்தத் தொகுதியில் 9 லட்சத்து 64 ஆயிரத்து 840 வாக்குகள் (81.24 சதவீதம் பதிவாகின) இதில் அனில்பாசு 7 லட்சத்து 44 ஆயிரத்து 466 வாக்குகள் (77.16 சதவீதம்) பெற்று அமோக வெற்றி பெற்றார். தனக்கு அடுத்தபடியாக வந்த பாரதீய ஜனதா வேட்பாளரை விட 5 லட்சத்து 92 ஆயிரத்து 502 வாக்குகள் கூடுதலாகப் பெற்றார்.

பொதுசன நூலகம்

# பஸ்வண்டி அன்பளிப்பு

பருத்தித்துறை ஸ்ரீ சாரதாதேவி ஆச்சிரமத்திற்கு இந்திய அரசினால் நடமாடும் நூலக பஸ்வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், உயர் ஸ்தானிகர் நிருபம் சென் பஸ்ஸின் திறப்பை மேற்படி ஆச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவிடம் கையளித்தார். (17)

# சாள்ஸ் மகா வித்தியாலயத்திற்கு அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் கடந்த 12 வருட காலமாக அதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி வி.எவ். சின்னத்துரையின் இடத்திற்கு யாழ். கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய எஸ்.ஞானப்பிரகாசம் நியமிக்கப்பட்டுள்ளார். (58)

# நிரந்தர மொழிபெயர்ப்பாளர்கள் இன்மையால் ஆட்கொணர்வு மனுக்களை விசாரிக்க முடியாதநிலை

## சட்டமா அதிபருக்கு சாவகச்சேரி நீதிவான் அறிவிப்பு

படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன தமிழ் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களை விசாரிக்க முடியாதநிலை காணப்படுவதாக சட்ட மா அதிபருக்கு சாவகச்சேரி நீதிவான் அறிவித்துள்ளார்.

நிரந்தரப் பேச்சு மொழி பெயர்ப்பாளர்கள் எவரும் இல்லாத காரணத்தினாலேயே இந்த வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாதிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

1996 ஆம் ஆண்டு மற்றும் 1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல்போன 22 இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களே சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கைதடி மற்றும் நாவற்குழி பகுதியில், குறித்த காலப்பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு ஒன்றின் போது கைது செய்யப்பட்டு, காணாமல்போன இளைஞர்கள் சிலரது சார்பிலேயே இந்த ஆட்கொணர்வு மனுக்கள் யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்களில், 22 ஆட்கொணர்வு மனுக்கள் - ஆரம்ப விசாரணைகளுக்காக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருந்தது.

காணாமல் போயிருந்த கைதடிப் பகுதியைச் சேர்ந்த இராமநாதன் அன்னலிங்கம் என்ற இளைஞர் தொடர்பாக அவரது மனைவியான அன்னலிங்கம் ஜெயகலா ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணைகள் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டிருந்தது.

அவ்வேளையில், உரிய மொழி பெயர்ப்பாளர்கள் இல்லாததால், விசாரணைகள் எதிர்வரும் ஜுன் மாதம் 9 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டிருந்தன.

இதனையடுத்தே, இந்த மொழி பெயர்ப்பாளர் பிரச்சினை தொடர்பாக சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆட்கொணர்வு மனுவில் தற்போதைய தளபதியும் சம்பவம் இடம் பெற்ற காலப்பகுதியில் யாழ் மாவட்டத் இராணுவத் தளபதியாக இருந்த வருமான லயனல் பலகல்ல, கைதடிப் பகுதிக்கு அப்போது பொறுப்பாகவிருந்த கப்டன் துமிந்த கெபிட்டிக் கொலாவ மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதி வாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில்



பெயர் : தி.சரவணபவன்
முகவரி : சங்குவேலி.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்



# ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் சுற்றாடலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரம வாராந்த ஆன்மீக சொற்பொழிவு தொடரில், இன்று காலை 10 மணிக்கு 'கண்ணன் காட்டிய பாதை' என்னும் தலைப்பு பற்றி - இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் சி.வேலாயுதம் சொற்பொழிவாற்றுவார். (17)

# பயணிகள் பேருந்துகளில் கடற்படையினரும் பயணம்

தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பஸ்ஸில் - கடற்படையினரும் பயணம் செய்வதனால், பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பிரதான வீதிகளில் அமைந்துள்ள காவலரண்கள், முகாம்களில் உள்ள கடற்படையினரே இவ்வாறு ஆயுதங்களுடனும், சீருடையுடனும் பஸ்களை வழிமறித்து, அதில் மக்களுடன் நெருக்கமான முறையில் பயணிப்பதுடன், சில சமயங்களில் இருக்கைகளில் அமர்ந்துகொண்டு, பயணிகளுக்கு இடம்கொடுக்காமலும் இருக்கின்றார்கள்.

முகாம்களில் இருந்து வீதியோர காவலரங்களில் உள்ளவர்களுக்கான உணவுகள், குடிநீர் போன்றனவும் இவ்வாறு பயணிகள் பஸ்மூலம் கொண்டு செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. 113)

# பட்டதாரிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் தென்மராட்சி செயலகத்தில் வழங்கப்படுகிறது

வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.

பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை இம்மாதம் 20 ஆம் திகதிகு முன்பதாக பிரதேச செயலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும் எனவும், விண்ணப்பத்தைக் கையேற்றமைக்கான சிட்டைகள் உடன் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களையும் இணைத்துச் சமர்ப்பிக்கவேண்டுமெனப் பிரதேச செயலக வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

பட்டச் சான்றிதழின் பிரதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதி, தேசிய அடையாள அட்டையின் பிரதி, திருமணமான பெண்ணாயின் - திருமணச் சான்றிதழின் பிரதி என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (24)

# வறுமைக்கோட்டின் கீழுள்ளோருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமம் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் 140 குடும்பங்களுக்கு ஆச்சிரமம் மாதந்தோறும் பணம், பொருட்கள் என்பவற்றை வழங்கி வருகின்றது.

இதைவிட 20 முன்பள்ளிச் சிறார்களுக்குச் சத்துணவுகளையும் வழங்கி வருகிறது. இந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த உதவிப்பணமும் வழங்கி வருகின்றது.

ஆறு முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறார்களுக்கு சத்துணவு தயாரிப்பதற்குக் குக்கர்களையும் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# ஏப்ரல் மாதத்தில் 13637 பேருக்கு சிகிச்சை

தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் ஏப்ரல் மாதம் மட்டும் 13637 பேருக்கு சிகிச்சை அளிகக்கப்பட்டுள்ளது.

திலீபன் மருத்துவ நிலையங்களான கற்சிலைமடுவில் 2571 பேருக்கும், பூநகரியில் 1963 பேருக்கும், புங்குடுதீவில் 1703 பேருக்கும், புளியங்குளத்தில் 1509 பேருக்கும், ஆழியவளையில் 1469 பேருக்கும், அளம்பிலில் 856 பேருக்கும், ஐயன்குளத்தில் 684 பேருக்கும், நயினாமடுவில் 457 பேருக்கும் என மொத்தமாக 13673 பேருக்கு இந்த மருத்துவமனைகளில் சிகிச்சையளிக்கப்பட்டது. (17)

# ஹலோ ட்ரஸ்ற் நிறுவனத்தினரால் தனியாருக்கு மண் விற்கப்படுவதில்லை

வண்ணார்பண்ணைப் பகுதியில் மிதிவெடி அகற்றிய பிரதேசங்களை உரிமையாளரிடம் ,கையளிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், நல்லூர் பிரதேச செயலர், யு.என்.டி.பி. அதிகாரிகள், கிராம அலுவலர்கள், ஹலோ ட்ரஸ்ட் அதிகாரி தனது உரையில் - எமது நிறுவனத்திடம் போதிய நிதிவசதி இல்லை, இயந்திரங்களில்லை. எனவே, இந்தப் பகுதிகளிலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட மண்ணை மீளக் கொண்டுவருவதற்குப் பல மாதங்கள் பிடிக்கும். அதற்குள் காணி உரிமையாளர்கள் விரும்பினால் கட்டடப் பணிகளை. ஆரம்பிக்கலாம். எமது நிறுவனத்தால் தனியாருக்கு மண் விற்கப்படுவதாக கூறப்படுவதில் எதுவித உண்மையுமில்லை என்றார். (17)



நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வி வலய முகாமைத்துவ உதவிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் மங்கள விளக்கேற்றுவதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட த.ஞானராசாவையும் மற்றும் நிகழ்ச்சியில் பங்குகொண்டோரையும் படத்தில் காணலாம்.





யாழ். கொழும்புத்துறை புனித சூசையப்பர் வித்தியாலய புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழாவின்போது நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி காங்கேயன், வணபிதா போல் நட்சத்திரம், அதிபர் எம்.ஞானப்பிரகாசம், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விக்கினேஸ்வரன், பொறியியலாளர் தயாபரன் ஆகியோர் மேடையில் வீற்றிருப்பதைக் காணலாம். (206)

# சட்டவிரோதமாக மின் பெற்றவருக்கு ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

முள்ளி விதி, அரியாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தட்சனாமூர்த்தி என்பவருக்கே ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணக் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரீ.விக்னராஜா - குறிப்பிட்ட நபர் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற போது, மின்சாரத்தால் தாக்குண்டு பசுமாடொன்று இறந்தமை மற்றும் இருவருக்கு மின்சாரம் தாக்கியமை ஆகியவற்றுக்கு நட்டஈடாக 25 ஆயிரம் ரூபாவை முறைப்பாட்டுக்காரரான அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்வராசா என்பவருக்குச் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட நபர் நட்டஈட்டுப் பணத்தைச் செலுத்தியதுடன், கடந்த 11 ஆம் திகதி மேற்படி நபருக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

# இடம்பெயர்ந்தோரின் நலன்களைப் பேண ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவினரால் இடம் பெயர்ந்த மக்களின் நலத் திட்டங்களை மேற்கொள்ளவென, மனித உரிமைகள் ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை, இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருக்கும் மக்களை அடையாளப்படுத்த, அவர்களது உரிமைகளை முன்னெடுக்க எனப் பிரதேசரீதியாக மனித உரிமைகள் ஊக்குவிப்பாளர்களை யாழ். மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவினர் நியமித்து செயறபடுத்தி வருகின்றனர்.

இந்த ஊக்குவிப்பாளர்கள் ஊடாக - இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுகளை உரியமுறையில் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்தனர். (91)

## விளையாட்டு அரங்கம்

# தங்கப் பசாசுகள்



மரியன் ஜோன்ஸ்
"நான் பொன் மகள்"

ஜமெய்க்கா (கரிபியன்) நாட்டின் சர்வதேச தடகளப்போட்டியில் மரியன் ஜோண்ஸ் பங்குபற்றியது அவருக்கு இரட்டை சந்தோஷம். அவருடைய முதன்மை நிகழ்ச்சிகள் இரண்டிலும் தங்கம் வென்றால் சந்தோஷமாக இருக்காதா என்ன? மகனைப் பெற்றெடுத்தபின் இது அவரது உயர்தகைமைப்போட்டி, அதோடு தன்நாட்டுக்கு அப்பால் 2002 இன் பின் முதலாவது போட்டி.

தனது தங்க நிகழ்வான 100 மீற்றர் ஓட்டப்போட்டியை 11.04. செக்கன்களில் இலகுவாக வெற்றிகொள்ள ஜமெய்க்காவின் அலன்பெய்லி (11.19 செக்) வெள்ளியைப் பெற்றார். டாய்னா ரோரன்ஸ் (11.29 செக்) வெண்கலம் வென்றார். அத்தோடு நீளம் பாய்தலில் 22 அடி 1 அங்குலம் கடந்து, தங்கப் பதக்கத்தைத் தட்டிக் கொண்டார் மரியன்.

இதேவேளை - இவரது கணவர் ரிம்மொண்ட்கொமரி 100 மீற்றர் ஓட்டத்தில் நான்காவது இடத்தையே பெற்றுக்கொள்ளமுடிந்தது. முதலிடம் பெற்றவர் 10.12 செக்கனில் ஓடி முடித்த டார்விஸ் பற்றன். இதேவேளை இன்னொரு அமெரிக்கரான கெய்ல்டேவாஸ் 100 மீற்றர் தடை தாண்டலில் (ஆண்கள்) தங்கம் வென்றனர். இன்னொரு நிகழ்ச்சியான 800 மீற்றர் ஓட்டத்தில் பெண்களில் வீராங்கனையான மொசாம்பிக் நாட்டின் மரியா முட்டோலா (2:00:38) தங்கம் வென்றார்.

இவர்கள் கலந்துகொள்ளும் இத்தகைய சர்வதேசப் போட்டிகள்மூலம் எதென்ஸ் ஒலிம்பிக்போட்டிகளில் தம் திறமையை வெளிக்காட்டி தங்கம் வெல்லும். ஆகவே பெரிதும் விஞ்சி நிற்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. - மரியா -

# தங்க மகன்

ஒலிம்பிக் தங்கவீரன் மொறிஸ்கிறீன் ரொம்ப உற்சாகமாக இருக்கிறார். உபாதைகளால் பலகாலம் தடை விதித்தாலும், தற்போது ஜப்பான் கிரோண் பிரிபோட்டிகளில் 100 மீற்றர் ஓட்டத்திற்கான தங்கத்தைத் வென்றிருக்கிறார் கிறீன்.

அவருக்கு மிக அவசியமாக இருந்த US உள்ளக போட்டிகளை, காயங்கள் நிமித்தம் இழந்தமை அவருக்குப் பெரும் துயரம். ஆனால், தற்போது அந்தக் குறையை ஜப்பானின் நாகெய் தடகள அரங்கத்தில் தீர்த்துக்கொண்டுள்ளார்.



மொறிஸ் கிறீன்
"இது 22 கரட்"

மொறிஸ் கிறீன் 10.4 செக்கன்களில் நூறு மீற்றரை தாவிப் பிடிக்க அடுத்து, இன்னும் இரண்டு அமெரிக்கர்களான ஜோண்சனும், மிக்கி கிரிம்சும் 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

கிறீன் தன் வெற்றி பற்றிக் கருத்துக் கூறுகையில், நான் மீண்டுவிட்டேன்.

எனக்கு என்மீது இப்போது நம்பிக்கை வந்துவிட்டது. என்னை நம்புவார்கள். எனது இலட்சியம் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் தங்கப்பதக்கம் அதனை வென்றே தீருவேன் என்கிறார் அவர். - லலி -

# அந்தநாள் ஞாபகம்...



ஜெப்ரலாசி
"மறக்க முடியாது"

நெடுந்தூர ஓட்டங்கள் என்றால் ஞாபகத்துக்கு வருவது ஆபிரிக்க நாடுகள் தான். அதிலும் சிறப்பாக கென்யா மற்றும் எதியோப்பியா. எதியோப்பியாவைச் சேர்ந்த நெடுந்தூர ஓட்ட வீரர் ஹெய்லி ஜெப்ரலாசி ஏற்படுத்தியிருக்கும் சாதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

இவர் முறியடித்த உலக சாதனைகள் பதினேழு. இரண்டு முறை 10 ஆயிரம் மீற்றர் ஒலிம்பிக் தங்கம் வென்றவர். நான்குமுறை 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் முதலிடம் பெற்றவர்.

இவர் தனது மைதான அனுபவங்கள் பற்றி சுவாரஸ்சியமான பல விடயங்களைப் பகிர்ந்துகொள்கிறார். 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டியில் அவர் பெற்ற அனுபவத்தை நடுநிலை நின்று அழகாக அசைபோடுகிறார்.

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் 10 ஆயிரம் மீற்றர் நெடுந்தூர ஓட்டப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவர் இவர். சிட்னியில் சந்தித்த அத்தனை பேருமே சமமான பலம் கொண்டவர்கள்தான். ஒரு சந்தர்ப்பத்தில் இப்போட்டியிலிருந்து விலகிக்கொள்வோமா என்றுகூட யோசித்தேன். இருந்தும் சிட்னிக்குச் சென்றதும் சரியானதொரு போட்டியைக் கொடுக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

இவருக்குப் போட்டியாகவும், சமதையாகவும் அமைந்திருந்தவர் கென்யாவின் போல் ரெர்காட். ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரசிகர்கள் இறுதிச் சுற்றில் இருவரும் ஆக்ரோஷமாகக் கடும் போட்டியிட்டு ஓடுவதைப் பார்த்து ஆரவாரித்தார்கள். வழக்கமாக ரெர்காட் இரண்டு கிலோ மீற்றர் தூரம் இருக்கும்போது வேகமான ஓட்டத்தைத் தொடங்கிவிடுவார். அன்றென்னீபா இறுதி 200 மீற்றர் வரையும் பொறுத்திருக்கிறார். இறுதி நிமிடத்தில் அவர் என்னைக் கடந்தபோது, நான் தொலைந்தேன் என்றே எண்ணினேன். தங்கம் அவருக்கு என்பதில் எதுவித சந்தேகமும் இல்லாமல் போய்விட்டது.

இருந்தும் இறுதியாக இந்த 200 மீற்றருககுள் ஒருமுறை, ஒரேயொருமுறை முயன்றுபார். போம் என்று தீர்மானித்தேன். வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இல்லைத்தான். ஆனால், முயல்வதில் தப்பில்லையே. இறுதி ஒருசில எட்டுக்கள் (கவடுகள்) மட்டுமே மிஞ்சியிருக்கின்றன. அதில் முதலாவது எட்டில் ஜெப்ரலாசி ரெர்காட்டை சமப்படுத்தினார். அடுத்த சில எட்டுகளுக்குள் முன்னோக்கிப் பாய்ந்தார். ரெர்கட் கண்மூடித் திறப்பதற்குள் ஜெப்ரலாசி தங்கத்தைப் பற்றிக்கொண்டார்.

இந்த ஓட்டப் பந்தயம் பற்றி ஜெப்ரலாசி கருத்துக் கூறுகையில் - ரெர்காட் என்னவோ எல்லாம் முயற்சி செய்து பார்த்தார். ஆனால், அவரால் முடியவில்லை. உண்மையில் சிட்னி ஒலிம்பிக் போட்டியின் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிக்கு இரண்டு தங்கப்பதக்கங்கள் கொடுத்திருந்தால், எவ்வளவு நன்றாயிருந்திருககும் என்று முடிக்கிறார் தங்கம் வெனற ஜெப்ரலாசி. - ஜெயா -

# எடுக்கவோ தொடுக்கவோ

இலங்கை சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிம்பாப்வே வீரர் முலேகி என்கலாவின் விக்கட்டை வீழ்த்தியதன்மூலம் சர்வதேச டெஸ்ட் சரித்திரத்தில் புதியதோர் சாதனை படைத்துள்ளார் இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன்.



முரளி
"இன்னுமின்னும் பாய்வேன்"

மேற்கிந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஸ் 132 போட்டிகளில் பங்குபற்றியே 319 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். ஆனால், இந்தச் சாதனையை முறியடிக்க முரளிதரனுக்குத் தேவைப்பட்டது 89 போட்டிகள் மட்டுமே.

தனது 20 ஆவது வயதில் 92 / 93 காலப்பகுதியில் அவுஸ்ரேலிய அணிக்கு எதிராகத் தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்த முரளி- அந்தப்போட்டியிலே மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அவுஸ்ரேலிய அணியின் மக்டர் மட்டின் விக்கெட்டே முரளியின் கன்னி விக்கெட்டாகும்.

தற்பொழுது சிம்பாப்வே அணி வீரர் என்கலாவின் விக்கெட்டினை 520 ஆவதாகக் கைப்பற்றி, உலக சாதனை படைத்திருக்கும் முரளியின் கிரிக்கெட் பாதையில் காணப்பட்டவை மலர்கள் மட்டுமல்ல முட்களும் தான். எத்தனையோ முட்களை மிதித்து இரத்தம் சொட்டச் சொட்ட நடந்துதான் சாதனை படைத்துள்ளார் முரளி. உலக சாதனை படைப்பதற்கிடையில் மூன்று தடவைகள் பந்துவீச்சு சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளார்.

முரளி விளையாடிய 89 டெஸ்ட் போட்டிகளில் 52 போட்டிகளைத் தனது சொந்த நாட்டிலும், 37 போட்டிகளை வெளிநாடுகளிலும் விளையாடியுள்ளார். இவர் 337 விக்கெட்டுக்களை இலங்கையிலும், 184 விக்கெட்டுக்களை வெளிநாடுகளிலும் கைப்பற்றியுள்ள முரளிக்கு, 415 வலது கைத்துடுப்பாட்ட வீரர்களும், 106 இடது கைத்துடுப்பாட்ட வீரர்களும் தமது விக்கெட்டுக்களைப் பறிகொடுத்துள்ளனர்.

தனது மத்திர ஜாலப் பந்துவீச்சின்போது, முரளிதரன் 231 விக்கெட்டுக்களைப் பிடி எடுத்தல் மூலமும், 125 விக்கெட்டுக்களை போல்ட் முறையிலும், 86 விக்கெட்டுக்களை எல்.பி.டபிள்யூ முறையிலும், 28 விக்கெட்டுக்களை ரிப் முறையிலும், 28 விக்கெட்டுக்களை ஸ்ரம்ப் முறையிலும், ஒரு விக்கெட்டினை கிற் விக்கெட் முறையிலும் கைப்பற்றியுள்ளார்.

இதேசமயம் அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக 59 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், நியூஸிலாந்து அணிக்கு எதிராக 30 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும், இங்கிலாந்து அணிக்கு எதிராக 65 ஒட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களையும், தென்னாபிரிக்க அணிக்கு எதிராக 84 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களையும், இந்திய அணிக்கு எதிராக 87 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களையும், மேற்கிந்திய அணிக்கு எதிராக 81 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், பாகிஸ்தான் அணிக்கு எதிராக 71 ஒட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், சிம்பாப்வே அணிக்கு எதிராக 81 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களையும், பாங்களாதேஷ் அணிக்கு எதிராக 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியமையுமே முரளியின் டெஸ்ட் அணிகளுக்கு எதிரான சிறப்பான பந்துவீச்சாகும். அத்துடன் இதுவரை 14 ஆட்ட நாயகன் விருதுகளையும் 7 தொடர் ஆட்ட நாயகன் விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

என்னதான் இருந்தாலும், முரளி சர்வதேச அரங்கிலே யாராலும் முறியடிக்கப்பட முடியாததொரு சாதனை ஒன்றை நிலைநாட்டப்போவது என்பது உண்மை. - லெஸ்லி -

# சுகமடையப் பிரார்த்திக்கின்றோம்



வீனஸ் வில்லியம்ஸ்
"நீ சிலையில்லை"

இன்னும் இரண்டு வாரங்களின் பிரெஞ் ஓப்பன் ஆரம்பிக்க இருக்கும் நிலையில் பங்கு பற்றலில் எதிர்பார்க்கப்பட்ட இன்னொரு வீராங்கனை பற்றிய செய்திகளும் அவ்வளவு நல்லதாக இல்லை. ஏனெனில், ஜேர்மன் ஓப்பன் போட்டிகளின் இறுதிப் போட்டிக்குத் தெரிவான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் தனது கணுக்கால் உபாதையால் வெற்றிக் கிண்ணத்தை பிரான்சின் வீராங்களை அமலி மொறிஸ்மோவிடம் தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறார். அமலி இந்த வெற்றிக் கிண்ணத்தை 2001 ஆம் ஆண்டு வென்றவர்தான் என்றாலும், இவ்வருடம் கிண்ணம் வென்ற பாணி அவருக்கே திருப்தியாக இருந்திராது.

இதேவேளை, வீனஸ் வெறும்கையோடு அமெரிக்கா திரும்பியிருக்கிறார். என்றாலும் அவரது இலக்கு பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டிகள்தான். வீனஸ் தற்போது தனது உபாதைகளின் நிலை பற்றி எடுத்துக் கூறுகிறார். இருந்தாலும், எப்படியும் பிரெஞ் ஓப்பன் கிண்ணத்தை வெல்வதே தனது இலக்கு என்கிறார். கடந்த வருடமும் பல போட்டிகளில் தன் முழுத்திறமையையும் காட்ட முடியாமல் போனமைக்கு இவரது உடல் உபாதைகள் முக்கிய காரணமாக அமைந்திருந்தமை ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதொன்று. தங்கை செரினாவுக்கு இணையாகவே இருந்து வந்த வீனஸ் - திடீரென்று பின் தள்ளப்படக் காரணம் இதுவேதான். இதெல்லாம் ஒருபுறம் இருக்க, பிரெஞ் ஓப்பன் போட்டிகளுக்குச் செல்லவிருக்கும் முதன்மை வீராங்கனைகள் வரிசையாகக் காயப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இம்முறை வெற்றிக் கிண்ணம் யாருக்கு என்பதுதான் புரியவில்லை. - பிரியா -

# மழை தருமோ மேகம்



பிறைன் லாரா
"என்னப்பா நெல்லா விதைக்கிறது?"

எங்கும் ஒரே மழை. மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் பிறைன் லாரா எடுத்தார் 400 ஓட்டங்கள் எனும் மழை. அதனைத் தொடர்ந்து மேற்கிந்திய தீவுகள் எங்கும் ஆனந்த மழை.

தொடர்ச்சியான மழை காரணமாக ஒரு நாள் போட்டித் தொடர்களும் பாதிக்கப்பட்டமையால், கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியிலும் கண்ணீர் மழை.

மழை காரணமாக ஏழு ஒருநாள் போட்டிகளைக்கொண்ட இங்கிலாந்து - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் மூன்று போட்டிகள் தடைப்பட்டன.

நடைபெற்ற முதலாவது போட்டியும் - 50 ஓவர்கள் பந்துவீச முடியாமல் மழை குழப்பியது. 30 ஓவர்களே போட்டிக்கான ஓவர்களாக நிர்ணயிக்கப்பட்டன. இந்தப் போட்டியில் முதலில் மேற்கிந்திய தீவுகள் அணி துடுப்பெடுத்தாடியது. 156 ஓட்டங்களை ஐந்து விக்கெட்டுக்களை இழந்து அந்த அணி பெற்றது. இதில் சந்திர போல 84 ஓட்டங்களைப் பெற்றார். லாரா போட்டியில் கலந்துகொள்ளவில்லை.

29.3 ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து, இங்கிலாந்து அணி மிகவும் கடினமான ஒருநிலையில் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. றீட் 15 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்று, போட்டியின் நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இடையில் மழையால் ஆட்டங்கள் ரத்து செய்யப்பட்டன. 5 ஆவது போட்டி ஆரம்பமானது. அதிலும் இங்கிலாந்தே வெற்றி பெறும் என்று கருதினார்கள் கிரிக்கெட் ரசிகர்கள்.

ஆனால், தனது முதலாவது வெற்றியை இங்கிலாந்துக்கு எதிராகப் பெற்றுக்கொண்டது. மேற்கிந்திய அணி. முன்னதாக ரஸ்கோதிக் இன் அற்புதமான சதத்துடன் (130) இங்கிலாந்து 281 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பிறைன் லாரா 59 ஓட்டங்களைப் பெற்றார்.

281 என்ற கடினமான இலக்கை 48 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை மட்டும் இழந்து பெற்றுக்கொண்டது மேற்கிந்திய அணி. சர்வான் 73 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டார். ஸ்மித் 44 ஓட்டங்களையும், சந்திரபோல் 40 ஓட்டங்களையும் லாரா 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆறாவது போட்டி லாராவின் பிறந்தநாள் அன்று நடைபெற்றது. லாரா பிறந்த நாளுக்கு பரிசு ஏதாவது தருவார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். லாரா மிகவும் பொறுமையாக விளையாடி - 37 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இங்கிலாந்து அணி இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடி, 280 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மைக்கல் வோன் 67 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவு அணி, 47.1 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது. சந்திரபோல் 63 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். லாரா பிறந்த நாள் பரிசாக 37 ஓட்டங்களைப் பெற்று வெற்றியையும் பெற்றுக்கொடுத்தார்.

ஒரேயொரு போட்டி மீதமான நிலையில் இரண்டு போட்டிகளை வென்று மேற்கிந்தியாவும், இங்கிலாந்து ஒரு போட்டியில் வென்றும் இருந்தன.

இரண்டு அணிகளுக்கும் ஏழாவது போட்டி முக்கியமாக அமைந்தது. மேற்கிந்தியா தொடரைக் கைப்பற்ற வேண்டியநிலை, இங்கிலாந்து தொடரைச் சமப்படுத்த வேண்டியநிலை. ஏழாவது போட்டி ஆரம்பமானது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 261 ஓட்டங்களை ஆறு விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக் கொண்டது அந்த அணி. சர்வான் அதி அற்புதமான சதம் ஒன்றைப் பெற்றுக் கொண்டார். (104 ஓட்டங்கள் - 103 பந்துகளில்)

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி - 47 ஓவர்களில் ஐந்து விக்கட்டுக்களை மட்டுமே இழந்து வெற்றியலக்கை அடைந்தது. இங்கிலாந்து போட்டித்தொடரைச் சமப்படுத்தியது. மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி வாய்ப்பை கைநழுவவிட்டது.

இரண்டு அணிகளுமே 2:2 என்ற ரீதியில் போட்டிகளை வென்றன. முதலில் துடுப்பெடுத்தாடிய அணி தோற்றது. பந்து வீச்சாளர்களைவிடத் துடுப்பாட்ட வீரர்களின் கையே ஓங்கியிருந்தமையை இந்த ஒரு நாள் போட்டித்தொடர் உணர்த்தியது.

மற்றைய மூன்று போட்டிகளும் நடைபெற்றிருந்தால், அவற்றில் மேற்கிந்தியத் தீவுகளின் அணியே வெற்றி பெற்றிருக்கும் என்று, அந்த அணியின் ரசிகர்கள் கருதுவதையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

- வெண்மதி -

# அஞ்சமாட்டாள் இந்த அஞ்ஜு



அன்ஜு ஜோர்ஜ் -அப்துல்கலாம்
"எதென்ஸ் உனக்குத் தூரமல்ல"

தடகளப்போட்டியொன்றில் இந்தியா சர்வதேச மட்டத்தில் பெற்ற முதலாவது பதக்கம் இந்தவருடம் பாரீஸ் தடகள சம்பியன் போட்டியில் - நீளம் பாய்தல் நிகழ்வில் அன்ஜு ஜோர்ஜ் பெற்றது. வெண்கலப் பதக்கமாகும். இந்தியாவைப் பொறுத்தவரை 2004 எதென்ஸ் போட்டிகளில் இவர் மீண்டும் ஒரு பதக்கம் பெறுவார் என்ற நம்பிக்கையே பெரிதும் காணப்படுகின்றது.

அன்ஜுவிற்கு மனக் குமுறல்கள் இருந்தாலும், தனது தாய் நாட்டுக்கு ஒரு பதக்கத்தைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பதே அவரது பேரவாவாக இருக்கிறது. ஒருவகையில் பார்த்தால், கிரிக்கெட் ஹொக்கி போன்றவற்றை விட்டால், ஏனைய விளையாட்டுகளுக்கு மவுசு குறைவு போலத்தான் இருக்கிறது. கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்றதும், உடனே வாழ்த்துக் செய்திகள் அனுப்பும் பிரதமர், அன்ஜு பதக்கம் வென்றதைக் கண்டுகொள்ளாமல் விட்டதில் அவருக்கு ரொம்பவும் வருத்தம்.

இது ஒருபுறமிருக்க தற்போது ஐரோப்பாவில் எதென்ஸ் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் இவர். காலமும் செல்லச் செல்ல இவரது நீளம் பாய்தல் தூரமும் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. இலங்கையில் நடைபெற்ற போட்டிகளில் (1999) 6.32 மீற்றர் பாய்ந்த இவர், 2002 இன் பின்னரே எல்லோரது கவனத்தையும் கவர்ந்தவர் ஆகிறார். 2002 இல் 6.59 மீற்றர் பின்னர் 6.58 மீற்றர் என்ற தூரங்களை இந்தியாவின் போபால் மற்றும் ஹைதாராபாத் நகரங்களில் நடைபெற்ற போட்டிகளில் பாய்ந்தவர், கொமன்வெல்த் போட்டிகளுடன் தரம் 13 இற்கு உயர்கிறார்.

இதன்பின்னர் சர்வதேசரீதியில் கலந்துகொண்ட பல போட்டிகள் இவரது தர வரிசையை முற்னேற்றும் ஏணிகளாகவே அமைந்திருந்தன. இன்று உலகத்தரவரிசையில் 6 அவது இடத்தில் அன்ஜு ஜோர்ஜ் உள்ளார்.

இப்பொழுது அவரது இலட்சியமெல்லாம் எதென்ஸ் 2004 ஒலிம்பிக் போட்டிகளில் ஒரு பதக்கம் வெல்வதுதான். அவரது ஆசை நிறைவேறினால், தென். ஆசியப் பிராந்திய மக்கள் என்ற வகையில் எமக்கும் சந்தோஷமே.

- துஷ்யந்தன் -

# என்ன ஆளுமையப்பா

தென்னாபிரிக்கா தனது கட்டுக்கோப்பை இன்னும் இழக்காமல் இருக்கிறது என்றால், அதற்கு ஒரு முக்கிய காரணம் நெல்சன் மண்டேலா. இவர் ஜனாதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற பின்னரும், தனது நாட்டுக்கான எந்த முக்கிய விடயத்தையும் வென்றெடுக்கப் புறப்பட்டுவிடுவார். அத்தோடு, அவருக்கு முதல் அழைப்பும் இருக்கும். தற்போது இவரது ஆசை 2010 ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளை - தான் நேசிக்கும் தாயகத்தில் நடத்திவிடவேண்டும் என்பதுதான். ஜனநாயக ஆட்சியமைப்புக்குள் வந்து பத்தாவது ஆண்டைக்கொண்டாடும் இவ்வேளையில், இதனைவிடப் பெரிய பரிசு தென்னாபிரிக்காவுக்கு இருக்க முடியாதென்கிறார் மண்டேலா.



நெல்சன் மண்டேலா
"மானுட தெய்வம்"

ஜூரிச் நகரில் நடைபெறவிருக்கும் **FIFA** கூட்டத்தில் கலந்துகொள்ளச் செல்ல இருக்கும் தென்னாபிரிக்க குழுவில் அங்கம் வகிப்பவர்களில் - நெல்சன் மண்டேலா, நோபல் பரிசு வென்ற வண. டெஸ்மண்ட் டுடு, முன்னாள் ஜனாதிபதி டீ கிளேர்க் ஆகியோரும் அடங்குகின்றனர். இவர்களில் கறுப்பின அங்கத்தவர்களுடன் தென்னாபிரிக்க ஆட்சிமாறும் காலத்தில் ஜனாதிபதியாக இருந்த டீ கிளேர்க்கும் செல்வதென்பது (வெள்ளை இனத்தவர்) அற்புதமானதொரு விடயம்தான். எவ்வளவோ பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்த பெரும்பான்மை இன கறுப்பின மக்கள், ஆட்சிமாற்றத்தின் பின் தம்மை நசுக்கிய வெள்ளை இன சிறுபான்மை இன மக்களை (பழிவாங்கவோ அதிகார வெறியோ இல்லாமல்) அரவணைத்துக் கொள்வது அதன் காரணமாக தென்னாபிரிக்கா பல்வேறு துறைகளுடன் இணைந்து, விளையாட்டுத்துறையிலும் உலகின் கவனத்தை ஈர்த்திருப்பது அதிசயம்தான் ஆனால் உண்மை.

முன்னர் 2006 உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை தென்னாபிரிக்கா ஒருவாக்கு வித்தியாசத்தில் இழந்திருந்தது. ஆனால், இம்முறை 2010 உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளை ஆபிரிக்கக் கண்டத்தில் நடத்துவது என்ற **FIFA** இன் தீர்மானத்துக்கு அமைய தெரிவு நடைபெறவுள்ளது. இங்கு போட்டியிடும் நாடுகள் தென்னாபிரிக்கா, எகிப்து, மொறோக்கோ, ரியூனிஷியா அனேகமாக எல்லோரது எதிர்பார்ப்பும் தென்னாபிரிக்கா சந்தர்ப்பத்தைப் பெறும் என்பதேயாகும்.

- துஷி -

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

**01. இலங்கை - சிம்பாப்வே தொடரின் பின் சிம்பாப்வேக்கு வர இருக்கும் கிரிக்கெட் அணி எது?**

**02. தற்போது மேற்கிந்தியத் தீவுகளில் கிரிக்கெட் தொடரை ஆரம்பித்திருக்கும் ஆசிய நாடு எது?**

**03. போதைப்பொருள் பாவனையால் நோயுற்றிருக்கும் உதைபந்தாட்ட வீரர் மரடோனா எந்த நாட்டவர்?**

**விளையாட்டுப் புதிர் - 11**

**விண்ணப்பப்படிவம்.**

**முழுப்பெயர்:- ........................................**

**முகவரி:- ........................................**

**01.**

**02.**

**03.**

**விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 21.05.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.**

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 11, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

பரிசு பெற்றவர்
கி.ஸ்ரீதரன்
நாகர்கோவில் தெற்கு,
நாகர் கோவில்.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

வாரநோக்கு... - யாழவன்

# அரசியல் அரங்கில் மாறும் காட்சிகள் சமாதான அரங்கில் மாற்றத்தை தருமா?



**போ**ரா? சமாதானமா? இரண்டுக்கும் நாம் தயார் என புலிகள் தமது நிலைப்பாட்டை தென்னிலங்கை அரசியல் தலைமைக்கு திட்ட வட்டமாக தெரிவித்துவிட்டனர். அத்தோடு, சமாதானம் தொடர்பான தமது நிதானமான நிலைப்பாட்டையும், பேச்சுவார்தைகள் என்ன ரீதியிலே நடாத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான தமது நிலையையும் புலிகள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

நடந்து முடிந்த ரணில் அரசின் ஆறு சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து பெறப்பட்ட அனுபவத்தையும், இருபது வருட கொடிய போரின் காரணமாக தமிழ் மக்கள் அனுபவித்த அவலத்தையும் மையமாகக் கொண்டே புலிகள் தமது கருத்தை வெளியிட டுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் தேசியத் தலைவரைச் சந்தித்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனிடம் உத்தியோக பூர்வமாக திரு. வே. பிரபாகரன அவர்கள் தமிழ் மக்களின் கருத்தை, அரசுக்கு அவர்கள் வழங்கும் செய்தியை தெரிவித்திருந்தார்.

இப்போது சமாதானப் பந்து சந்திரிகா தலைமையிலான அரசின் பக்கமேயுள்ளது. அதனை அடித்துப் பிரிப்பதா இல்லை அதனை பயன்படுத்தி தொடர்ந்து விளையாடுவதா என்பதனை அரசுதான் தீர்மானிக்கவேண்டும். தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக வெளிவரும் கருத்துக்களை மையமாக வைத்துப் பார்க்கும்போது ஒரு உண்மை நிலையை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

அதாவது சமாதானம் தொடர்பான தமிழ் தரப்பினரின் குறிப்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும், நம்பிக்கையும் என்றும் மாறாது ஒன்றாகவேயுள்ளன. ஆனால், தொங்கு நாடாளு மன்றம் அமைத்து அரசு நடாத்திக் கொண்டிருக்கும் சிறுபான்மை அரசான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சமாதான நிலைப பாடானது அவர்களது ஆட்சி போல தளம்பல் நிலையிலும் முன்னுக்குப் பின் முரணான நிலையிலுமுள்ளது.

முக்கியமானதொரு விடயத்திலேயே அரச தரப்பிடம் இருவேறு கருத்துக்கள் நிலவி வருவதனை காணக்கூடியதாகவுள்ளது. விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வது தொடர்பான அரசின் நிலைப்பாடானது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மாதிரி மாறி வருகிறது. ஜனாதிபதியின் பிரதம ஆலோசகரும் வெளிவிவகார அமைச்சருமான கதிர்காமர் புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்று பேசத் தயார் என கூறிவரும் அதேவேளை அரசின் தலைவியான ஜனாதிபதி தன்னைச் சந்தித்த நோர்வே குழுவினரிடம் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்கமுடியாது என்றும் பேச்சுவார்த்தைகளின் பிரதான பங்குதாரர்களாகவே ஏற்கமுடியும் எனவும் புலிகளோடு மட்டுமே தீர்வு விடயம் தொடர்பாக பேசப்பட்டாலும் ஏனைய தமிழ்க் கட்சிகளிடமும் அது விடயம் தொடர்பாக ஆராயப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

இது அரசின் சமாதான நம்பிக்கையின் அளவையும் இரட்டை வேடதாரித்தனத்தையும் அம்பலப்படுத்தி வருகிறது. இக்கபடத்தனமான செயல் தொடர்பாக புலிகளும் நன்கு அறிவார்கள். அவர்களுக்கு அரசின் சமாதான நிலைப்பாட்டிலே நம்பிக்கையீனம் இருந்தாலும் அதனை வெளிப்படுத்தி சமாதான நகர்வுகளுக்கு தடைபோட விரும்பாது மிகவும் கவனத்துடன் செயற்பட்டு வருகிறார்கள்.

அரசு ஒருபுறம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அதேவேளை போருக்கான ஆயத்தங்களை செய்து வருவதையும் நாம் அறிவோம். எனவும் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். அவரது இந்த கருத்தை உறுதிப்படுத்தும் விதத்திலே அண்மைக் காலத்திலே உள்ளூர் மற்றும் சர்வதேச அரசியல் அரங்குகளிலே சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இஸ்ரேலிடமிருந்து மலிவு விலையில் ஆயுத தளபாடங்கள் மற்றும் ஆயுதக் கொள்வனவு விடயத்துடன் சம்பந்தப்பட்ட இஸ்ரேல் அரசின் முன்னாள் அமைச்சர் ஒருவர் மீதும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இந்த விடயம் அரசின் சமாதான "நம்பிக்கைக்கு" சான்று பகர்வதாகவுள்ளது.

அத்துடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக முன்னர் இருந்த அனுருத்த ரத்வத்தையையே மீண்டும் அப்பதவியிலே அமர்த்த ஜனாதிபதி முயற்சி எடுத்திருந்தார். அவரது முயற்சியானது கட்சிக்குள் ஏற்பட்ட எதிர்ப்புக்களினாலும் வெளியிலிருந்து கொடுக்கப்பட்ட சில நெருக்கடிகள் காரணமாகவும் கைவிடப்பட்டது. அனுருத்த ரத்வத்தையை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலே நியமிக்க முயன்ற விடயம் கூட ஒரு போருக்கான ஆயத்தமாகவே பார்க்கப்பட வேண்டியதாகும்.

அனுருத்த ரத்வத்த முன்னர் இக்கடமையிலிருந்த போது அரசு தரப்பிலிருந்து தொடுக்கப்பட்ட சில தாக்குதல்கள் வெற்றியில் முடிவதற்கும் சில தாக்குதல்களை முறியடிப்பதற்கு ஏற்ற வகையிலும் செயற்பட்டு இருந்தார். நேரடியாக களத்திற்கு வந்து போர் முனைகளிலுள்ள இராணுவத்தினரை சந்தித்து அவர்களுக்கு இனவாதக் கருத்தை ஊட்டி போர் வெறியர்களாக மாற்றியதிலே அனுருத்தவுக்கு நிகர் அவரேதான். தனது இளமைப் பராயத்திலே ஒரு இராணுவ வீரராக இருந்த அவரது அனுபவமும் இதற்கு துணை செய்திருந்தது.

களத்திற்கு நேரடியாக இறங்கிய ரத்வத்த பல உயிராபத்துக்களில் இருந்தும் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார். ஓயாத அலைகள் தாக்குதல் நடவடிக்கையின்போது ஒட்டுசுட்டான் பகுதியிலே அனுருத்த ரத்வத்த நின்ற சமயம் புலிகள் நடாத்திய பீரங்கித் தாக்குதலில் இருந்து மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார். இன்னொரு தடவை அவர் பயணம் செய்த ஹெலிகொப்டர் வவுனியாவை அண்டிய பகுதிக்குள் இயந்திரக் கோளாறு காரணமாக தரையிறங்கிய போதும் ஒரு தமிழ் விவசாயியின் துணையுடன் தப்பிச் சென்றிருந்தார். இவ்வாறு ஆயுள் கெட்டியான அனுருத்த தற்போது சட்டத்தின் பிடியிலே கைதியாக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியை உடைய அனுருத்தவை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலே அமர்த்துவதன் மூலம் இராணுவத்திற்கு உளரீதியான ஊக்கக் கருத்துக்களை வழங்கி போருக்கு தயார்ப்படுத்த சந்திரிகா திட்டமிட்டார். அவரது திட்டமிடல் ரத்வத்தயின் ஒழுங்காற்றுகை காரணமாக பிசுபிசுத்துப் போனது.

இத்தோடு, குடாநாட்டிலே கடமையிலீடுபட்டுள்ள இராணுவத்தினருக்கு விசேட போர்ப் பயிற்சிகளை வழங்கி படைவலுவை பலப்படுத்தி வருகிறது அரசு. ஆனால், இப்பயிற்றப்பட்ட படையாக இருந்தாலும் புலிகளின் போர் உபாயத்தின் முன்வெறும் தூசாகவே போகும் என்பது நடந்து முடிந்த சண்டைக் களங்கள் கூறும் உண்மை.

இவ்வாறு அரச தரப்பானது போருக்கு வேண்டிய ஆயத்தங்களை செய்து கொண்டே சமாதானத்தையும் முன்னெடுக்க முனைகிறது. இது ஆபத்தான விடயமாக அமையக்கூடும். ஆனாலும் புலிகளும் போருக்கு தாம் தயார் என தெரிவித்துவிட்டனர். சமாதானம் மீதும் அதன் அடிப்படையிலான தீர்வு மீதும் புலிகள் காட்டிவரும் அதீத நம்பிக்கையை அவர்களது பலவீனமாக அரசு கருதமுனைந்தால் அது அரசுக்கே ஆபத்தாக முடியும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன முன்னர் நாடாளுமன்றத்திலே தமிழ் தலைவர்களைப் பார்த்துக் கேட்டார் போரா? சமாதானமா? அதை நீங்களே தீர்மானியுங்கள் என. அதே கேள்வி இப்போது தமிழர் தரப்பிலிருந்து சிங்கள தலைமைகளுக்கு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மூலமாக விடுக்கப்பட்டுள்ளது. போரா? சமாதானமா? இரண்டுக்கும் நாம் தயார் எனும் பாணியிலே இப்போது தீர்மானிக்க வேண்டியவர்கள் சிங்களவர்கள்.

இத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை நோக்கியதாக மட்டுமே அமைய வேண்டுமே தவிர இறுதித் தீர்வை நோக்கியதாக இருக்காது எனவும் தேசியத் தலைவர் தமது செய்தியை நோர்வே ஊடாக அரசு தரப்புக்கு விடுத்துள்ளார். நாடாளுமன்றத்திலே பெரும்பான்மை பலமற்ற அரசுடன் இறுதித் தீர்வு தொடர்பாக பேசுவது பொருத்தமான விடயமல்ல என புலிகள் தமது செய்திக்கு காரணமும் காட்டியுள்ளனர். இதுவும் கூட முக்கியமானதொரு கருத்தேயாகும்.

ஏனெனில், தமிழ் மக்களின் பிரச்சினையானது அரசியல் யாப்புக்கு வெளியான விதத்திலேயே தீர்க்கப்படவேண்டிய கட்டாயமுள்ளது. எனவே இறுதித் தீர்வு எட்டப்பட வேண்டுமாகவிருந்தால் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பானது மாற்றப்படவேண்டும். இதனை மாற்றக்கூடிய வாக்குப் பலமும் மனோ பலமும் தற்போதைய அரசிடம் கிடையாது.

இறுதித் தீர்வு எனும்போது அது நிரந்தரத் தீர்வாக அமையவேண்டும் என்பதைவிட நியாயமான தீர்வாக அமையவேண்டும் என்பதே முக்கியமானதாகும். நியாயமானதொரு தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடிய மனோநிலை தற்போதுள்ள அரசின் அங்கம் வகிக்கும் எவரிடமும் அறவே கிடையாது.

எனவே இத்தகைய மனப்பாங்கு கொண்டவர்களோடு இறுதித் தீர்வு தொடர்பாக பேசுகின்ற போது பல நெருக்கடிகளையும், அழுத்தங்களையும் சந்திக்கவேண்டி ஏற்படும். பேச்சு மேசையிலே இறுதித் தீர்வு எனும் தோரணையிலே புலிகள் மீது பல நிபந்தனைகளுடன் கூடிய நெருக்குதல்கள் பிரயோகிக்கப்படும். அவற்றை ஏற்றுக் கொள்வது என்பது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட நோக்கிற்கும், ஏகோபித்த முடிவிற்கும் முரணான .க அமையும். இதனால் விரும்பியோ விரும்பாமலோ தவிர்க்க முடியாத காரணத்தினால் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகி நியாயமான தீர்வை நோக்கி தமிழ்த் தரப்பு மீண்டும் போரிடவேண்டிய தேவையேற்படும்.

ஒரு கபடத்தனத்தை மையமாக வைத்தே அரசு இறுதித் தீர்வு என பேசிவருகிறது. புலிகள் மீது போரை வேண்டுமென்றே திணித்து விட்டு புலிகள் தான் சமாதானத்தை குழப்பி விட்டார்கள். அவர்கள் அமைதி வழிக்கு தயார் இல்லையென கூச்சலிட்டு சர்வதேச எதிர்ப்பை தமிழ் மக்கள் மத்தியிலே விதைப்பதற்கே அரசு திட்டமிடுகிறது. இதனாலேயே பேச்சுவார்த்தை மேசையில் நடைபெறும் சம்பவங்களின் உண்மைத்தன்மையின் முழுவடிவமும் உலகுக்கு தெரியாமலிருப்பதற்காகவே பேச்சுவார்த்தைகளை உள்நாட்டிலே நடாத்துவதற்கும் அரசு முயன்றுவருகிறது.

1995 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே சந்திரிகாவினால் முன்னெடுக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகளும் மேற்கண்ட பாணியிலேயே முறியடிக்கபட்டு மீண்டும் போர் ஆரம்பமானது. அரசு யாழ்.குடாநாட்டை கைப்பற்றிக் கொண்டது. இவ்வாறானதொரு திட்டமிடலுடனேயே அரசு தற்போதும் செயற்பட முனைந்தாலும் வேகம் மிக்க புலிகள் இவ்விடயத்திலே விவேகமாகவும் உள்ளனர்.

மேலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கே எத்தனையோ தடைகளைத் தாண்ட வேண்டிய நிலையிலுள்ள அரசு இறுதித் தீர்வை நெருங்குவது என்பது நினைத்துக்கூட பார்க்கமுடியாத விடயமாகும்.

> **ஏனெனில், தமிழ் மக்களின் பிரச்சினையானது அரசியல் யாப்புக்கு வெளியான விதத்திலேயே தீர்க்கப்பட வேண்டிய கட்டாயமுள்ளது. எனவே இறுதித் தீர்வு எட்டப்பட வேண்டுமாகவிருந்தால் தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பானது மாற்றப்பட வேண்டும். இதனை மாற்றக்கூடிய வாக்குப் பலமும் மனோ பலமும் தற்போதைய அரசிடம் கிடையாது.**



அத்தோடு, தற்போதும் அரசு தனது முழுமையான சமாதான ஆவலை வெளிப்படுத்த வில்லை.

புலிகளுக்கு எதிரான சக்திகளுக்கு உதவி வழங்கியும் புலிகளின் போராளிகள் கொல்லப்படுவதற்கு உடந்தையாகவிருந்தும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து மீறிவரும் அரசு விடுதலைப் புலிகளை, சீற்றம் கொண்டு வலிந்தபோரை ஆரம்பிக்கத் தூண்டுகிறது.

கடந்தவார முற்பகுதியிலும் இராணுவத்தினர் நெருக்கமாகவும், இறுக்கமாகவும் காவல் கடமையிலீடுபட்டிருந்த மட்டக்களப்பு வீதியொன்றிலே வைத்து விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இரண்டு பேர் இனந் தெரியாதவர்கள் என கூறப்படுவோரால் பட்டப் பகலிலே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தினால் சீற்றமடைந்துள்ள புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாக அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு புரிந்துணர்வு இன்றி தனது செயற்பாடுகளால் சமாதானத்திற்கு மேலும் எதிரான நிலையை தோற்றுவித்துவரும் இன்றைய அரசு எவ்வாறு இறுதித் தீர்வை அமைதி வழியிலே எட்டக்கூடியதாக செயற்படும் என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

இந்த நிலையில் இந்தியத் தேர்தல் முடிவுகளும் வெளியாகியுள்ளன. இந்தியாவிலே காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் பல தொகுதிகளில் அமோக வெற்றி பெற்று இருக்கின்றன. குறிப்பாக தமிழ் நாட்டிலே ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. முழுமையான தோல்வியைச் சந்தித்துள்ளது. ஜெயலலிதாவின் தோல்விக்கு பல காரணங்கள் இருந்தாலும் விடுதலைப் புலிகள் தொடர்பாக அவர் பின்பற்றிய கொள்கைகளும் அவரது தோல்விக்கு காரணமாக இருந்திருக்கலாம்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசினார்கள் என்ற குற்றத்திற்காக வை.கோ. பழநெடுமாறன் உள்ளிட்ட தமிழகத் தலைவர்களை பொடா சட்டத்தைப் பயன்படுத்தி சிறையில் தள்ளியதற்கான பலனை ஜெயலலிதா தற்போது தேர்தல் மூலமாக பெற்றிருக்கிறார். பழிவாங்கும் ஜெயலலிதாவின் படலத்தை தமிழ்நாட்டு மக்கள் தேர்தல் வாக்குகள் மூலமாக முடிவுக்கு கொண்டு வந்துள்ளனர். ஜெயலலிதாவின் வீழ்ச்சியானது தமிழ் நாட்டிலே விடுதலைப் புலிகள் தொடர்பான கருத்தியலிலே மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் நிறையவுள்ளன. இந்த கருத்தியல் மாற்றம் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளிலே புதிய திருப்பங்களை ஏற்படுத்த வழிவகுக்கலாம்.

ஆனால் இந்தியாவில் புதிய பிரதமராகப் போகும் சோனியா தலைமையிலான அரசு விடுதலைப் புலிகள் மீது தொடர்ந்தும் தமது காழ்ப்புணர்வை காட்டுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயம். ராஜிவ் காந்தியின் மனைவியான சோனியா தனது கணவரின் கொலையுடன் சம்பந்தப்பட்ட புலிகள் மீது எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கின்றாவோ அந்த நிலைப்பாட்டையே தமிழகமும் விரும்பியோ விரும்பாமலோ பிரதிபலிக்க வேண்டியேற்படும்.

சோனியா புலிகள் மீது எடுக்கும் தீர்வு முற்படின் கதிர்காமர் போன்ற வேடதாரிகள் அதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி இந்திய அரசை சமாதானப் பேச்சுவார்த்தைகளிலே நேரடியாக தலையிடவைத்து புலிகளை ஓரம்கட்ட முயற்சிக்கலாம். இவ்வாறு எடுக்கப்படும் முயற்சிகள் நாட்டு நலன் கருதி நன்மை பயக்கக்கூடியதாக இருக்கமுடியாது.

எனவே தற்போதைய சமாதான நடவடிக்கைகள் புதிய அரசொன்றால் முன்னெடுக்கப்படும் அதேவேளை இந்தியாவிலும் புதிய அரசு அமைந்துள்ளது. இந்தத் தொடர்பானது அமைதிக்கான வழிகாட்டியாக திகழ வேண்டுமென்பதே அனைவரது எதிர்பார்ப்புமாகும். விடுதலைப்புலிகளும் இந்தியாவுடன் மீண்டும் சினேகபூர்வமான உறவுகளைப் பேணுவதிலேயே அக்கறையாகவுள்ளனர். எனவே, ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் சரித்திரங்களையும் மாற்றி எழுதும் சக்திமிக்கனவாக மாறட்டும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கண்ணோட்டத்து உள்ளது உலகில் அஃதுஇலார்*
*உண்மை நிலக்குப் பொறை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## 'றொக்கா' வின் வருகையும் அமெரிக்க அணுகு முறைகளும்

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையியே நடைபெறவுள்ளதாகக் கூறப்படும். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் ஏனைய அமைதி முயற்சிகளுக்கும் அமெரிக்கா தனது பூரண ஆதரவை வழங்கும் என்று தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் இராஜங்க உதவிச் செயலாளர் கிறிஸ்ரீனா றொக்கா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு, கொழும்புக்கு வருகை தந்ததன் நோக்கம் அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் தொடர்பாகப் பேச்சுகளை மேற்கொள்வதுதான் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்திருந்தாலும், அவரின் இந்த விஜயத்திற்கு வேறு சில உள்நோக்கங்களும் இருக்கக்கூடும் என அரசியல் நோக்கர்கள் தெரிவத்துள்ளார்கள்.

- அவர்களின் இந்தக் கூற்றையும் நிராகரித்து விடமுடியாது.

புதிய, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்றதன் பின்னர் - இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்திற்கு ஏற்ற இலங்கையின் அரசியல் பொருளாதார மற்றும் வெளியுறவு தொடர்பான விடயங்கள் எத்தகைய மாற்றம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது என்பதை நாடிபிடித்துப் பார்ப்பதுடன், அரசின் சமாதானம் தொடர்பான முன்னெடுப்பு முயற்சிகளின் ஆரம்ப நகர்வுகள் எத்தகைய இலக்கினை முன்னெடுப்பதாக இருக்கிறது என்பதை அறிந்து கொள்வதும்கூட அவரின் நோக்கமாக இருக்கலாம்.

ஏற்கனவே, முன்னைய ரணில் தலைமையிலான அரசின் சமாதான முயற்சிகளின் பின்னணியில் அமெரிக்காவின் வலுவான வழிகாட்டல் மற்றும் ஆதரவுப் பலம் இருந்தது என்பதை எவரும் மறுக்கமுடியாது. நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னர் மேற்கொள்ளப்பட்டாலும், பிரிட்டன், ஜப்பான், அவுஸ்ரேலியா போன்ற அமெரிக்க ஆதரவுச் சக்திகளும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்குலக சக்திகளும் அதற்கு வலுவான ஆதரவை வழங்கின என்பதும், இந்த ஆதரவு நிலைப்பாட்டுக்கு அப்போதைய எதிர்க்கட்சியான இப்போதைய ஆளும் கட்சி கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்ததும் உண்மையேயாகும்.

அமெரிக்கா மற்றும் மேற்குலகின் ஆதரவுடனான சமாதான முயற்சிகளின் அடிப்படையில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பெருந்தொகைப் பணத்தைக் கடனடிப்படையிலும், நிதியுதவியாகவும் வழங்க முன்வந்ததும் இன்றைய அரசுத் தலைவியாகவும் இருக்கும் அன்றைய ஜனாதிபதிக்கு தனது அரசியல் எதிர்காலம் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியதால் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சியை கலைக்கும் நடவடிக்கையை அதிரடியாக மேற்கொள்ள வைத்தது. அது எதிர்கால சமாதான முயற்சிகளையும் கேள்விக்குறியாக்கியது.

தேர்தல் காலத்தில் ரணில் அரசின் சமாதான முன்னெடுப்புகளும், நோாவேயின் அனுசரணையும் மேற்குலகின் அதற்கான பின்புல ஆதரவும் மிகவும் கடுமையாக இன்றைய ஆட்சித் தரப்பினரால் விமர்சிக்கவும், கண்டிக்கவும் பட்டது. அத்துடன் எதிர்கால சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடியாகத் தலையீடுசெய்து முக்கிய பங்காற்ற வேண்டும் என்று கதிர்காமர் போன்றோரால் வலியுறுத்தலும் செய்யப்பட்டது.

வெளிப்படையாக அமெரிக்காவுக்கு இத்தகைய கருத்துக்கள் பாதிப்பினை ஏற்படுத்தியதாக அது காட்டிக்கொண்டாலும், அமெரிக்கா புதிய ஆட்சியினர் விடயத்தில் மிகுந்த அவதானமாகவே இருந்தது.

எது எப்படியிருந்த போதிலும் அரசின் நோக்கங்களுக்கு யதார்த்த நிலையான்து முரணாகவே இருந்தமையால் சந்திரிகா மீண்டும் சமாதானம் தொடரவேண்டியதும் அதற்கென மீண்டும் நோர்வேயைச் சரணைடைவதும் தவிர்க்கவே முடியாத அம்சமாகிவிட்டது.

இது அமெரிக்காவுக்கு கிடைத்த மறைமுக ராஜதந்திர வெற்றியேயாகும்.

இந்தியாவுக்கு சமாதான முயற்சி தொடர்பாக விளக்க ஓடிய கதிர்காமர் அடுத்ததாக இன்று அமெரிக்காவிற்கும் பறந்து போய்க் கதைப்பதும் இதன் வெளிப்பாடேயாகும்.

கதிர்காமர் அமெரிக்காவில் நிற்க, றொக்கா கொழும்பு வந்துள்ளமையானது ஒரு இணை நிகழ்வாகவே நடந்துள்ளது எனலாம்.

கொழும்பில் அரச மற்றம் எதிர்க்கட்சி பிரமுகர்களையும், அதிகாரிகளையும் சந்தித்த றொக்கா ஜனாதிபதி - பிரதமர் ஆகியோரையும் சந்தித்து பேசியுள்ளதுடன் தமிழ்க் கூட்டமைப்பினரையும் சந்தித்துள்ளார்.

இதன்போது அவர்கள் விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்கவேண்டும் என்று கோரியுள்ளனர்.

- இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு ஆயுதங்களைக் கீழே வைக்கும் வரை தடை தொடரும் என்று பதிலளித்திருக்கிறார் றொக்கா.

- தமிழ் மக்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறைக்கும் சிங்கள ஆட்சியாளரின் தமிழின அழிப்புக்கும் உதவியும், ஒததாசையும் ஆயுத ரீதியிலும், பயிற்சி ரீதியலும் வழங்கி தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள அவல நிலைக்கு அமெரிக்காவும் ஒரு காரணம் என்பதை தமிழ் மக்கள் மறக்க முடியாதவர்களாகவே உள்ளனர்.

இந்த நிலையில் நியாயமானதும், நிரந்தரமானதும் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை முழுமையாக அங்கீகரிப்பதுமான அரசியல் தீர்வொன்று கிடைக்கும் வரை ஆயுதங்களை கீழே போடக்கோருவதை தமிழ் மக்கள் அநபாயமான கோரிக்கையாகவே கருதுவர் என்பதை றொக்கா அவர்கள் உணர்ந்து கொள்வது இக்கட்டத்தில் முக்கியமானதாகும்.

அந்த அடிப்படையில் நியாயமான அரசியல் தீர்வை முன்வைக்க அரசை அறிவுறுத்தி அதற்கு அழுத்தம் கொடுப்பதே அமெரிக்கா இப்போது செய்யக்கூடிய சிறப்பான பணியுமாகும்.




செய்தி:- இனவன்முறைகளைத் தூண்டிவிடுவதன் மூலம் சமாதான முயற்சிகளைக் குழப்ப ஹெலஉறுமயவினர் முயற்சி செய்வதாக ஜே.வி.பியினர் குற்றச்சாட்டு

### தொழில்நுட்பக் கல்லூரிகளில்

## பட்டங்களைப் பூர்த்திசெய்தோர் பாதிக்கப்படக்கூடிய நிலையில்

தேசியரீதியில் வேலையில்லாத பட்டதாரிகளை அரச சேவைகளில் உள்வாங்கும் நோக்கில் இடம்பெற்றுவரும் முகாமைத்துவப் பயிற்சியில் சேர்ப்பதற்கான விண்ணப்பத்தில் தற்போது தொழில் நுட்பக்கல்லூரிகளில் தமது கல்வியை பூர்த்திசெய்த எச்.என்.டி.சி., எச்.என்.டி.ஏ. போன்ற டிப்ளோமாதாரிகள் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பு தோன்றியுள்ளதாகத் தெரிகிறது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

பட்டதாரிகளுக்கான முகாமைத்துவ பயிற்சி திட்டத்தில் உள்வாங்கும்பொழுது, 1998 ஆம் ஆண்டு காலப்பகுதி தொழில்நுட்பக் கல்லூரி டிப்ளோமாதாரிகளின் பட்டமானது, வணிகமாணி பட்ட்த்துக்கு இணையானதென்று சுற்றுநிருபம் கூறுகிறது.

ஆனாலும், தற்போதைய நடைமுறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரியே இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியுமென சில பிரதேச செயலகங்களில் கூறப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பாகப் பட்டதாரிகள் சங்கம் உடன் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், மேலதிக அரச அதிபருடனும் தொடர்பு கொண்டு, இவர்களின் விண்ணப்பங்களை முதலில் பிரதேச செயலகங்களில் ஏற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

தற்பொழுது அரச அதிபர் யாழ்ப்பாணத்தில் இல்லாமையால், இறுதி முடிவுகள் எடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதெனவும், இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் சகலருடனும் கலந்து ஆலோசித்து நல்ல முடிவினை தருவதாயும் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ்பிரேமச்சந்திரன் உறுதியளித்துள்ளார். (205)

## தகவல் தொடர்பாடற் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் திறமைகள் வளர்த்துக் கொள்வதற்கான திட்டத்தின்கீழ் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழுக்கான ஒருவருட பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் (கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி உட்பட) சித்தி பெற்றிருப்பதுடன், 16-25 இற்கு இடைப்பட்ட வயதெல்லையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அ. அட்டை இல, சித்தியடைந்த பாடங்களுடன் கல்வித் தகைமை ஆகியவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாகாணப் பணிப்பாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, இல. 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 15-06-2004 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு மாகாணப் பணிப்பாளர் பொ.இராமநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தீர்வை விலக்களித்த பொருட்களை பொறித்த விலைக்கே விற்கவும்

### விலைக்கட்டுப்பாட்டுப்பிரிவு

(யாழ்ப்பாணம்)

நிதித்துறையின் ஆயபகுதி விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் யாழ்ப்பாணம் தீர்வை விலக்கப்பட்ட சில பொருட்களை உற்பத்தி நிறுவனத்தினால் பொறித்த விலைக்கு விற்பனை செய்யுமாறு யாழ்.வணிகர் கழகத்துக்கு அறிவித்துள்ளனர்.

அந்த வகையில், குழந்தைகளுக்கான பால்மா, உணவு வகைகள், மருந்துப் பொருட்கள், விவசாய உள்ளீடுகள், கால்நடை உணவு, மருந்துவகை, கனியுப்புக் கலந்த நீர் மாணவர் பயிற்சிப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள், படங்கள் செய்தித் தாள்கள், புத்தகங்கள், நாவல்கள், கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள் என்பவற்றுக்கே தீர்வை விலக்கப்பட்டுள்ளது. இதற்கமைய உற்பத்தி நிறுவனத்தினால், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களில் பொறிக்கப்பட்ட விலைக்கே விற்பனை செய்யப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட பொருட்களில் விற்பனை நடைமுறை நேற்று முதல் நடைமுறைக்கு வருவதாகவும், இதனை சகல வர்த்தகர்களினதும் கவனத்திற்குக் கொண்டுவருமாறும் நிதித்துறையினர் ஆயபகுதி விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவின் பொறுப்பாளர் - யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திற்கு அறிவித்துள்ளார்.

## ஒன்பது பாடசாலைகளை புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

யாழ்ப்பாண மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 9 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புன்ரமைப்புத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் ஆறு பாடசாலைகளிலும், வடமராட்சி கல்வி வலயத்தில் மூன்று பாடசாலைகளிலும் இரண்டு மாடிக்கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த வகையில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, தொண்டமாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், ஒஸ்மானியாக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் போரினால் பாதிக்கப்பட்ட அடுக்கு மாடிக் கட்டடங்கள் புனரமைக்கப்படவுள்ளன. (122)

## வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 5 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள்

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் சுமார் 5 ஆயிரம் ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளதாக மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.முருகுப்பிள்ளை தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களிலுள்ள 2006 பாடசாலைகளில் இந்த வெற்றிடங் கள் நிலவுகின்றன.

வன்னிப் பிரதேசத்தில் ஆகக் கூடுதலான 46 சதவீத ஆசிரிய பற்றாக்குறையும், கல்குடா வலயத்தில் 30 சதவீத வெற்றிடமும், கந்தளாய் மூதூர் வலயங்களில் தலா 30 சதவீத வெற்றிடங்கள் உள்ளதாக மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## பொது மக்கள் நலன் கருதி அரியாலையில் கிராமிய வங்கி

அரியாலை பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கிராமிய வங்கி ஒன்று திறக்கப்படவுள்ளது.

சங்கம் மற்றும் சங்க அங்கத்தவர்களின் நலன்கருதி அவர்களுக்கு கடன் மற்றும் வைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இந்தக் கிராமிய வங்கி திறப்பதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருவதாகவும் இதற்காக இந்தச் சங்கத்தின் பணியாளர்கள் சிலர் வட மாகாண கூட்டுறவுச் சங்கத்தில் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் மேற்படி சங்கத்தின் பொதுமுகாமையாளர் ச.புஸ்பராஜா தெரிவித் ஈார். (55)

தெற்குத் திசையினிலே....

இந்திரஜித்



# விட்டுக்கொடுத்தல், இணங்கிப்போதல், அனுசரித்தல்... அரசுக்கு தவிர்க்கமுடியாத விடயங்களாகிவிட்டன......!

சமாதான முன்னெடுப்புகள் வேகமடைந்துள்ளன. ஆனால் சமாதானத்தில் ஈடுபடப் போகும் இரண்டுதரப்புகளும் இன்னும் ஒருவரை ஒருவர் புரிந்துக்கொள்ளவில்லை. புரிந்து கொள்ளவதிலும் கஷடங்களை எதிர்நோக்குகின்றன. இவை யாவறறுக்கும் காரணம் கடந்த காலத்தின அனுபவங்களும், வடுக்களுமே என்பதில் சந்தேகமில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளும் கடந்த காலங்களில் இலங்கை அர சாங்கங்களுடன் ஆறு தடவைகளுக்கு மேல பேச்சுவார்தைகளை நடத்தியுள்ளனர். இதன் மூலம் நிச்சயம் இரண்டு தரப்பிலும் புரிந்துணர்வுகள் வளர்ந்திருககு வேண்டும். ஆனால் நடந்ததெல்லாம் மாறுபாடான நிகழ்வுகளே இரண்டு தரப்புமே தமக்கிடையிலான புரிந்துணர்வில் பாரிய விரிசல்களையே இந்த காலகட்டத்தில் கண்டன. அதுமட்டுமல்ல பலமுறை யுத்தத்திலும் ஈடுபட்டன.

ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் இந்திய ஒத்துழைப்புடனான சமாதானம்,பின்னர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் கால சமாதானம், அதனைத் தொடர்ந்து தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவுடனான சமாதானம், ஆகியவற்றின் மூலம் இலங்கை அரசாங்கத்தை காட்டிலும் தமிழீழ விடுதலைப் புலிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டனர்.

ஜே.ஆர் ஜெயவர்த்தன எந்த இந்தியா தமிழ் இயக்கங்களுக்கு உதவியதோ அதே இந்தியாவைக் கொண்டு தமிழ் இயக்கங்களை நசுக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஜனாதிபதி பிரேமதாஸவும், இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவும் "நம்பிக்கை" என்ற பெயரில் தமிழீழப் போராட்டத்திற்கு பாதிப்பையே ஏற்படுத்தினார்.

இவர்களின் சமாதான முயற்சிகளையடுத்தே இலங்கையின சமாதானத்துக்கு இலங்கை அரசாங்கத்துடன் மாத்தத்திரம் நம்பி பேச்சுவார்தைதை நடத்தமுடியாது. அதற்கு மூன்றாம் தரப்பும் அவசியமானது என்ற விடயம் வலியுறுத்தப்பட வேண்டியேற்பட்டது. எனினும் ஏற்கனவே மூன்றாம தரப்பாக இருந்து தமிழ்மக்கள் மத்தியில் பாரிய அழிவுகளை ஏற்படுத்திய இந்தியா மீண்டும் ஒருமுறை மூன்றாம் தரப்பாக இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையில் பங்கெடுப்பதை தமிழ் மக்கள் விரும்பவில்லை.

அவ்வாறான முனைப்புகள் யாவற்றை யும் அவர்கள் சந்தேகத்துடனேயே நோக்கினர். இந்தியா மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை மேற்கொண்டால் வஞ்சம் தீர்க்கும் பாணியிலேயே நடக்க முற்படும் என்ற உணர்வு தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டது.

இலங்கை இராணுவத்தினரை காட்டிலும் இந்திய இராணுவத்தினர் மேற கொண்ட தமிழ் மக்கள் மீதான கொடுமைகள் மக்கள் மத்தியில் நீங்காத வடுக்களாய் நிலை கொண்டேயுள்ளது. இதனையடுத்தே பிரேமதாஸவும், சந்திரி காவும் வெளிநாடுகளின் மத்தியஸ்தம் இன்றி பேச்சுக்களை ஆரம்பிக்க முனைப்பெடுத்தனர்.

எனினும், அவையும் வெறும் கண்துடைப்பாகவே முடிந்தன. இந்த நிலையிலேயே பிராந்தியத்துக்கு அப்பால மேற்கத்தைய நாடான நோர்வே இந்த சமாதான முன்னெடுப்பு விடயத்தில் தலையிடலானது. இந்த முயற்சியை ஆரம்பித்து வைத்த தற்போதைய ஜனாதிபதி 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதில் வெற்றி காணவில்லை.

என்றாலும் இலங்கையின் நிறைவேற்று அதிகார வலுக்கொண்ட ஜனாதிபதியை விடவும் அதிகாரம் அற்ற நிலையில் ஆட்சி நடத்திய ஐக்கிய தேசிய கட்சியின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முழுமையாக இல்லா விட்டாலும், சமாதான முன்னெடுப்புக்களில் தமிழ் மக்களுக்கு ஓரளவு நம்பிக்கை ஒன்றை ஏற்படுத்தினார் என்பதை மறுக்கமுடியாது. எனினும் அவரை இலங்கையின் தனிமனித அதிகாரம் கொண்ட 1977 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு தொடர்ந்து சமாதான நகர்வுகளை முன்னெடுக்க அனுமதிக்கவில்லை.

இடையில் அவரின் ஆட்சியானது தற்போதைய ஜனாதிபதியினால் பதவி நீக்கம் செய்யப்பட்டது. இதற்கு ஜனாதிபதியினால் நாட்டின் இறைமை பாதிக்கப்படுவதாக காரணம் முன்வைக்கப்பட்டபோதும், அது பொய்யான வாதம் என்பது தற்சமயம் அனைவருக்கும் புரிந்துவிட்டது.

ரணில் விக்கிரமசிங்கவினால் இலங்கை யில அமைதி ஏற்படும் என மக்கள் மத்தியில் எணணம் ஏற்பட்டு விட்டாலே அது தமது அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடும் என ஜனாதிபதி பயங்கொண்டார்.

அத்துடன், அமெரிக்க விஞ்ஞான ஆருடரும் தற்போது இலங்கையின் பிரஜையுமான ஆர்தர்-சி-கிளாக் நான்கு வருடங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்த, 2007ஆம் ஆண்டில் சந்திரிகாவுக்கு சமதானத்துக்கான நோபல் பரிசு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் கலைந்து போய்விடும் என்ற ஆதங்கம் ஜனாதி பதிக்கு ஏற்பட்டது.

எனவேதான் ஜனநாயக வழியில் நாடாளுமன்றத்தில் பெரும் பான்மையைக் கொண்டிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை அவர் தொடர்ந்து இயங்க முடியாமல் கலைக்கச்செய்தார். இந்தநிலயில் ஜனாதிபதி முன்னெடுத்துச் செல்லும் சமாதான முனைப்புகள் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த சமாதானத்தைக் காட்டிலும் எவ்விதத்திலும் வேறுபாடுகளைக் கொண்டிருக்கவில்லை.

எனினும் நாட்டின் ஜனாதிபதி அதிகாரத்தைக் கொண்டு ரணில் மேற்கொணட சமாதானத்தையே விரைவுப்படுத்திச் செல்ல சந்திரிகாவுக்கு வாய்ப்பு இருக்கிறது. அன்று ரணிலின் சமாதான முனைப்புகளுக்கு நிறைவேற்று அதிகாரம கொண்ட ஜனாதிபதி, மாக்ஸிஸ் கொள்கையை கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின்ரும், இலங்கையின் அரசியலில் இன்று பாரிய செல்வாக்கை பெற்றிருக்கும் ஜாதிக ஹெல உறுமய பிக்குமார் ஆகியோர் எதிர்ப்புக்களை ஏற்படுத்தி வந்தனர்.

ஆனால் இன்று ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளுக்கு ஜாதிக ஹெல உறுமய மாத்திரமே எதிராளியாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜனாதிபதியின் சமாதானத்தில் முழுமையாக மக்கள் விடுதலை முன்னணி ஆதரவைக்காட்டா விட்டாலும், ஆளும் தரப்பு என்ற வகையில பாரிய எதிர்ப்புகளுக்குச் செல்லாமல் இருக்கும் கொள்கையை கடைப் பிடித்து வருகிறது.

ஆனாலும் தமக்கு வாக்களித்த மக்களை திருப்திப்படுத்தும் வகையில் அவ்வப்போது சில கருத்துக்களையும் அது கூறி வருகிறது. அதில் ஒன்றுதான் தமிழீழ விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளாமல் சமாதான பேச்சுவார்த்தையின் பிரதான பங்காளராக ஏற்றுக் கொள்வதாக அந்தக்கட்சி தெரிவித்துள்ள கருத்தாகும்.

மக்கள் விடுதலை முன்னணியை பொறுதத வரையில் அதன் நோக்கங்கள் எல்லாம் தற்போதைக்கு தமது கட்சிக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியில் இருப்பதற்குள் பன்மடங்கு பெருப்பித்து கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

அதனைப் பயன்படுத்தி அடுத்து வரும் பொதுத்தேர்தல் ஒன்றில் இரண்டாவது தனிப் பெருங்கட்சியாக உருவாக வேண்டும் என்ற அடிப்படையில்தான் மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்டு வருகிறது. இது பெரும்பாலும் வெற்றியளிக்ககூடிய முயற்சிதான் என்பதில் மறுகருத்தில்லை.

ஏனெனில் ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் தங்களின் நிர்வாகத்திறமை மற்றும் நிர்வாகக்கட்டமைப்பு ஒழுங்குமுறைகள் என்பவை அவர்களை நிச்சயம் சிங்கள மக்கள் மத்தியில் உயர்ந்த கட்சியின் ஸ்தானத்திற்கு கொண்டு வரும் என்றே நம்பு கின்றனர். ஜாதிக ஹெல உறுமயவைப் பொறுத்தவரையில் அந்தக்கட்சி முன்னரைக் காட்டிலும் சிங்கள மக்கள் மத்தியில் சற்று சரி வான செல்வாக்கையே கொண்டுள்ளது.

13 ஆவது நாடாளுமன் றத்தின் முதலாவது அமர்விலேயே ஜாதிக ஹெல உறுமய இரண்டு பிரிவுகளாக பிரிந்து சென்றமையே அதற்கு சிறந்த உதாரணமாகும்.

எனினும், இன்று அந்த கட்சி மாத்திரமே அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிராக செயற்படுவதால் சிங்கள பௌத்த மக்கள் அந்த கட்சியின் கருத்துக்களை செவிமடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதற்கு மத்தியில் தென்னிலங்கையில் மீண்டும் ஒரு தேர்தல்களத்தை சந்திப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. செயல் இழந்துபோயுள்ள வடககு - கிழக்கு மற்றும் 6 மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடைபெறும் என்றே தகவல்கள் வெளியாகியுள்ளன.

மொத்தமுள்ள 8 மாகாண சபைகளில் வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் அண்மையில் முடிவடைந்து அதில் மத்தியில் ஆட்சியதிகாரத்தை வென்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெறறி பெற்றது. இது பொதுத்தேர்தல் ஒன்றின் பின்னர் அரசாங்கம் பாரிய அபிவிருத்தி முன்னெடுப்புகள் எதனையும் மேற்கொள்ளாத போதும் அதன் பொதுத் தேர்தல் வாக்குறுதிகளுக்கு இன்னும் மக்கள் மத்தியில் உயிர் இருக்கிறது என்பதையே குறித்து நிற்கிறது.

எனவே எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சியே வெற்றிப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறத்தில் மக்கள் விடுதலை முன்னணியும் தமது கொள்கைகளை மக்கள் ஏற்றுக் கொண்டமையே தங்களின் இந்த வெற்றிக்கு காரணம் எனக் கூறுவதற்கு தயாராகி வருகிறது.

தமக்கு நிறைவேற்று அதிகாரம் இருப்பதால் ஜனாதிபதி முன்னர் சிறுபான்மை அரசாங்கம் என்ற விடயத்தில் பெரிதாக அலட்டிக் கொள்ளாவிட்டாலும் தற்சமயம் தமது சிறுபான்மை அரசாங்கத்தை பெரும் பான்மை அரசாங்கமாக மாற்றிக் கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இதன் பிரதான கட்டமாக எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அதனுடன் இணைந்து பங்காளர்களாக விரும்பும், ஆறுமுகன் தொண்டமானையும், ரவூப் ஹககீமையும் தமது அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ள ஜனாதிபதி முயற்சித்து வருகிறார்.

அது பெரும்பாலும் வெற்றியளிக்கும் வாய்ப்பே தற்சமயம் நிலவுவதாகக் கூறப்படுகிறது. ஆறுமுகன் தொண்டமானைப் பொறுத்த வரையில் தமது கட்சிக்கு இரண்டு அமைச்சுக் களும், இரண்டு பிரதி அமைச்சுக்களும் தரப்படுமேயானால், தாம் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறார்.

ரவூப் ஹக்கீமும் - முக்கிய அமைச் சுப் பதவிகள் தரப்பட்டால் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க ஆயத்தமாகவே உள்ளார். இதற்குப் பெரும்பாலும் ஜனாதிபதி தரப்பும், மக்கள் விடுதலை முன்னணி தரப்பும் இணங்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

தமது அரசாங்கத்தை காப்பாற்றும் முயற்சி என்பதால், தமது கொள்கையான 35 அமைச்சுகளுக்கு அதிகமாக அமைச்சுக்கள் இருக்கக் கூடாது என்ற விடயத்தை இந்த இரண்டு கட்சிகளும் விட்டுக்கொடுக்கும் என்றே கருதப்படுகிறது.

ஜனாதிபதி, எவர் எதிர்த்தாலும் மீண் டும் தாம் நாடாளுமன்றத்திற்கு பிரதமராக வருவதற்கான முயற்சிகளை கைவிடுவதாக இல்லை. இதனை அண்மையில் தம்மை சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரியிடமும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

**இன்று ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளுக்கு ஜாதிக ஹெல உறுமய மாத் திரமே எதிராளியாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜனாதிபதியின் சமாதானத்தில் முழுமையாக மக்கள் விடுதலை முன்னணி ஆதரவைக்காட்டா விட்டாலும், ஆளும் தரப்பு என்ற வகையில பாரிய எதிர்ப்புகளுக்குச் செல்லாமல் இருக்கும் கொள்கையை கடைப் பிடித்து வருகிறது.**

இதற்கு அப்பால் பொதுத் தேர்தலில் அடைந்த தோல்வியிலிருந்து தம்மை சுதாகரித்துக் கொள்ள ஐக்கிய தேசிய கட்சி முயனறு வருகிறது. இதன் அடிப்படையில் அந்த கட்சி தற்சமயம் கட்சியை புனரமைக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் சாதாரண மக்களுடன் இருந்து வந்த தூரத்திலான உறவுமுறையை நெருக்கமாக மாற்றிக் கொள்ள அந்தக்கட்சி முயன்று வருகிறது. எல்லாவற்றையும் பார்க்கும்போது ஜனாதிபதியிடமிருந்து முன்னர் திட்டமிட்டதுபோல ஐந்து மாதக் காலப் பகுதிக்குள் ஆட்சியை கைப்பற்றுவது என்பது ஐக்கிய தேசிய கட்சிக்கு கஷ்டமான காரிய மாகவே இருக்கப்போகிறது.

---

அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசின் சமகால அரசியல் ஆய்வு நாளை வெளியாகும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்

---

# இருளில் மூழ்கிக்கிடக்கும் சுன்னாகம் பஸ் நிலையம்

(உடுவில்)

வலிதெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்தின் முன்னால் உள்ள சுன்னாகம் பஸ் நிலைய சுற்றாடல் மின்சாரம் இன்றி இருளில் முழ்கியுள்ளது.

கடந்த பல மாதங்களாக இப்பகுதி யில் பொருத்தப்பட்டுள்ள மின்கு மிழ்கள் பழுதடைந்துள்ள போதிலும் அதை மாற்றிச் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

தற்பொழுது இரவிலும் பஸ்நிலையத் தில் பஸ்கள் வந்துதரித்துச் செல்கின் றன. இதில் வரும் பிரயாணிகள் பஸ் நிலையம் இருளில் உள்ளதால் திருடர் தொல்லைக்கும், சமூகவிரோதிகளின் நடவடிக்கைகளுக்கும் உள்ளாகலாம் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரம் அருகிலுள்ள கடைக ளின் மின்சார ஒளியிலேயே பிரயாணிகள் நடமாடுகின்றனர். கடைகள் பூட்டப் பட்டுள்ள வேளைகளில் மேலும் சிரமத் திற்குள்ளாகின்றனர். இது தொடர் பாக மின்சார சபையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பிரயாணிகள் தெரிவித்தனர்.

(101)

# புத்தூர் பிரதேசத்தில் இலவச மருத்துவ முகாம்

(புத்தூர்)

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தி னால் புத்தூர் வாதரவத்தை அக்காச்சி கிராமத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்று இன்று காலை நடத்தப்படவுள்ளது.

அக்காச்சி கிராமத்தில் உள்ள சிறுவர்கள் பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொண்டே மானிப்பாய் பரிஷ்லியோக் கழகத்திரால் இந்த முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. இதை விட இக்கிராமத் திலுள்ள வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்குவதற்கு பரிஷ்லியோக்கழகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அக்காச்சி கிராமத்தில் உள்ள சிறுவர் பூங்கா முன்பு லியோக்கழகத்தினால் புனரமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (46)

### புதிதாக அமைக்கப்படவுள்ள

# ஈராக் அரசு கேட்டுக்கொண்டால் தமது படைகள் வெளியேறுமாம்

## அமெரிக்க கூட்டணி நாடுகள் தெரிவிப்பு

ஈராக்கில் புதிதாக அமைக்கப்படவுள்ள அரசாங்கம் கேட்டுக் கொண்டால் தமது நாட்டுப் படைகளை ஈராக்கிலிருந்து வெளியேற்றுவதற்கு தாம் தயாராக இருப்பதாக அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி மற்றும் ஜப்பான் நாடுகள் தெரிவித்துள்ளன.

ஜி 8 எனப்படும் நாடுகளின் கூட்டத்திலேயே இந்த முடிவை மேற்படி நான்கு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களும் தெரிவித்தனர்.

ஈராக்கிலிருந்து படைகளை வெளியேற்றுவது தொடர்பாக அமெரிக்கா தலைமையிலான கூட்டணி நாடுகளின் உறுப்பினர்கள் முதன் முறையாக தமது கருத்தினை வெளியிட்டுள்ளனர்.

ஆனாலும், ஈராக்கிலிருந்து படைகள் வெளியேற்றம் சாத்தியமாக இருக்குமென தான் நினைக்கவில்லையென அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொலின் பவல் தெரிவித்தார்.

ஆனாலும், ஈராக்கின் புதிய அரசு விரும்பும் பட்சத்தில் அமெரிக்கா தனது படைகளை ஈராக்கிலிருந்து வெளியேற்றும் எனவும் தெரிவித்தார்.

இத்தாலி நாட்டு வெளிநாட்டமைச்சர் பிராங்கோ பிரட்னி, பிரிட்டன்



வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ ஆகியோரும் ஈராக்கிலிருந்து தமது படைகள் புதிய அரசு விரும்பினால் வெளியேறும் எனத் தெரிவித்துள்ளனர்

# ஈராக் கைதிகளின் விசாரணைகளில் சில வழிமுறைகளை கைவிட கோரிக்கை!

## அமெரிக்கப் படைகளுக்கு வொஷிங்ரன் அறிவுறுத்தல்

ஈராக்கில் கைதியொருவர் மீது விசாரணை மேற்கொள்ளும்போது இதுவரை பாவிக்கப்பட்டுவந்த சில வழிமுறைகளை நிறுத்திவிடுமாறு அமெரிக்கப் படைகளிடம் தெரிவித்துள்ளதாக வொஷிங்டன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நித்திரைகொள்ள விடாது தடுத்தல், புலன் உறுப்புக்களை நன்கு செயற்படவிடாது தடுத்தல், இயல்பிற்கு மாறான நிலையில் நிற்க அலலது இருக்கவைத்தல் ஆகியன தடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 72 மணித்தியாலங்களுக்கு மேல் கைதி ஒருவரை நித்திரைகொள்ளவிடாது தடுத்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. தலைப்பகுதியை மூடி மறைப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் இந்த வகையான தண்டனைகளைப் பென்ரகன் அனுமதித்திருந்தது. ஆனால், இந்த வகையான தண்டனைகளை ஈராக்கிலுள்ள உயர் இராணுவ அதிகாரிகளின் உத்தரவின் பின்னரே செயற்படுத்தவேண்டும் எனவும் தெரிவித்திருந்தது. ஆனால், ஈராக்கில் கைதிகள் மீது இந்தவகையான துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.



இந்தக் கைதிகள் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகப் பல ஜனநாயகக் கட்சி அங்கத்தவர்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் தெரிவித்த கருத்தில் ஜெனிவாவின் மனித உரிமை சட்டங்களுக்கு முரணானவை எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

### ஈராக் கைதிகள் துன்புறுத்தப்பட்ட விவகாரம்

# பிரிட்டனின் படைப்பிரிவொன்றிடம் மன்னிப்புக் கோரியது டெய்லி மிரர்!




பிரித்தானியாவின் டெய்லிமிரர் பத்திரிகை - ஈராக் கைதிகள் துன்புறுத்தல் தொடர்பான படங்களை அண்மையில் வெளியிட்டிருந்தது. இந்தக் குற்றங்களை பிரித்தானியாவின் லங்கர் செயர் படைப்பிரிவே மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டிருந்தது.

ஆனால், இந்தப் படங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று தெரிவித்து அந்தப் படைப் பிரிவிடம் டெய்லி மிரர் பத்திரிகை மன்னிப்புக் கோரியுள்ளது. இந்தச் சம்பவத்தின் பின் பத்திரிகை ஆசிரியர் பியொர்ஷ் மோர்கன் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

அத்துடன் இந்தப் பத்திரிகை - வாசகர்களிடமும், ஈராக்கில் பணிபுரியும் பிரித்தானிய படையினரிடமும் மன்னிப்புக் கேட்டிருந்தது.

தம்மிடம் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டே அந்தப் படங்கள் தயாரிக்கப்பட்டதாகவும் டெய்லிமிரர் தெரிவித்திருந்தது. இதேவேளை, இந்தப் பத்திரிகை ஆசிரியர் மோர்கன் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்கு மறுத்திருந்ததாகவும், இதனால், பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### உலக நோக்கு

# பிரேசிலின் அமேசன் காட்டுப் பகுதியில் பயணிகள் விமானம் விழுந்து நொருங்கியது

33 பயணிகளுடன் பறந்து கொண்டிருந்த விமானமொன்று பிரேசில் நாட்டின் அமேசன் காட்டுப் பகுதியில் விழுந்து நொருங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொலம்பியாவின் மனாயஸ் விமான நிலையத்திற்கு பறப்பினை மேற்கொண்டிருந்த இவ் விமானம் கடந்த வெள்ளிக்கிழ்மை இரவு காணாமற்போனது. இவ்வாறு காணாமற்போன விமானத்தைத் தேடி ஹெலிகொப்ரர்கள் மூலம் தேடுதல் நடத்தப்பட்டவேளை விமானத்தின் உடைந்த பாகங்கள் அமேசன் காட்டுப் பகுதியில் இருப்பது கண்டுபிடிககப்பட்டது.

மீட்புப் பணியை மேற்கொள்பவர்கள் விமான விபத்தினால் உயிரிழந்த மற்றும் உயிருடன் இருப்போர் போன்ற விபரங்களை தெரிவிக்க முடியாமல் உள்ளனர். இத்துடன் விமானம் தீப்பிடித்ததாகவோ அல்லது வெடிவிபத்தினாலோ விபத்துக்குள்ளாகியிருப்பதற்கான எவ்வித அடையாளங்களையும் காணவில்லையெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் காஸா நகர் மீது தாக்குதல்



இஸ்ரேலின் இயந்திர துப்பாக்கி பொருத்திய ஹெலிகொப்ரர்கள் காஸா நகர் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. இத் தாக்குதல் இஸ்லாமிக் ஜிகாட் எனப்படும் தீவிரவாத குழுவினை குறிவைத்து நடத்தப்பட்டது.

நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகள் மீதே மேற்கொள்ளப்பட்டது. கட்டடங்கள் வெறுமையாக காணப்பட்டதால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. ராபா அகதிகள் முகாமில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வேளையில் இரு இஸ்ரேலியப் படையினரும் இரு பலஸ்தீனரும் கொல்லப்பட்டனர்.

இதன்பின் இஸ்ரேலியப் படையினரால் ஹெலிகொப்ரர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தாக்குதல் நடத்தப்பட்ட கட்டடத்தில் இஸ்லாமிய கல்வி நிலையமொன்றும் அமைந்திருந்ததால், ஹெலிகொப்ரர் தாக்குதல் இஸ்லாமிய கல்வி நிலையத்தின் மீதே நடத்தப்பட்டிருக்கலாமென பி.பி.சியின் அலன் ஜோன்ஷ்ரொன் தெரிவித்தார். மற்றயதொரு ஹெலிகொப்ரர் தாக்குதலில் இரு எறிகணைகள் இஸ்லாமிய ஜிகாட்டுடன் தொடர்புடைய கட்டடத்தின் மீது மேற்கொள்ளப்பட்டது.

தற்கொலைப் போராளிகளுக்கு பணம் வழங்கும் காரியாலயமொன்றின் மீதே எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இவ்விரு தாக்குதல்களிலும் சம்பந்தப்பட்டிருந்த கட்டடங்கள் தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புள்ளவையென இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, காஸாப் பிரதேசத்தில் மோதல்கள் நிகழ்ந்துள்ளன. ரபாவில் சினைப்பர் தாக்குதலில் இரு இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

### பர்மிய இராணுவ ஆட்சியாளர்கள் நடத்தும்

# அரசியலமைப்பு பேச்சுவார்த்தையில் எதிர்க்கட்சி பங்கேற்க மாட்டாது!

பர்மாவில் இராணுவ ஆட்சியாளர்களினால், ஒழுங்கு செய்யப்பட்ட அரசியலமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தையில் முக்கிய எதிர்க் கட்சி பங்குகொள்ளப்போவதில்லையென தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங சூகி இதுவரை விடுதலை செய்யப்படாமலிருப்பதால் இந்தமுடிவை எடுத்துள்ளதாக ஜனநாயகத்திற்கான தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. பர்மாவில் ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்திக்கொள்வதற்கான பாதை வரைபின் முதல்படி இது என பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அரசியல் சட்ட அமைப்பு கருத்தரங்கில் எதிர்க்கட்சி பங்கு கொள்ளாத நிலையில் அவர்கள் நம்பகத்தன்மையை இழக்க நேரிடலாம் என செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். இக் கருத்தரங்கு நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும் இக் கருத்தரங்கில் பங்கு கொள்வதன் மூலம் எதுவித பலனையும் பெறப்போவதில்லையென ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஆங்சாங் சூகி பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங் சூகி மற்றும் கட்சியின் உப தலைவர் ஆகியோர் தொடர்ந்தும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் எதிர்க்கட்சி அலுவலகங்கள் புதிதாக திறப்பதற்கும் இராணுவ ஆட்சியாளர்கள் அனுமதி மறுத்து வருகின்றனர். இக் காரணங்களினாலும் கருத்தரங்கில் பங்கு பற்றவில்லையென ஆங்சாங் சூகி தெரிவித்தார்.



# விஞ்ஞான ரீதியில் உருவான கோதுமை விற்பனைக்கு விடப்படவில்லை

உலகத்தில் முதலாவதாக விஞ்ஞான முறையில் குரோமசோல் மாற்றத்தினால் உருவாக்கப்பட்ட கோதுமை, விற்பனைக்கு விடப்படவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க இரசாயன கமத்தொழில் நிறுவனமான மொன்ரானா தாம் மரபணு ரீதியாக உருவாகிய ரவுண்ட் அப் ரெடி என்ற கோதுமை வர்க்கத்தை சந்தைக்கு விட விரும்பவில்லையெனத் தெரிவித்தது.

மேற்படி நிறுவனம் இப்படியான கோதுமை வர்க்கத்தை தயாரித்துள்ளது. இவ் வர்க்கம் புல் நாசினிகளாலான தாக்கத்திற்கு ஈடு கொடுக்கவல்லது என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டுச் சந்தை குறிப்பாக ஜப்பான் தாம் இப்படியான வர்க்கங்களை வாங்கவிரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளது.

### 2000இல் தேர்தலுக்கு நிதிசேகரித்தது குறித்து

# மக்களிடம் மன்னிப்புக் கோரினார் தென்கொரிய நாட்டு ஜனாதிபதி!

தென்கொரிய ஜனாதிபதி ரோமூ கையூன் மீண்டும் பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரினார். தவறான முறையில்தன் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றங்களுக்கு அரசியல் ரீதியாகவும், உளரீதியாகவும் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் தனது உரையில் அவர் தெரிவித்தார்.

பொருளாதாரத்தை மீண்டும் உயர்த்துவதற்கு முக்கிய இடமளிக்கப் போவதாகவும் தன்னை பதவியிலிருந்து வெளியேற்றியிருந்த எதிர்க் கட்சிகளுடன் இணைந்து செயற்படப் போவதாகவும் தெரிவித்தார். மேலும் தனது உதவியாளர் மீது சுமத்தப்பட்டிருந்த ஊழல் குற்றச் சாட்டுதலுக்கும், 2002 தேர்தல் காலத்தில் நிதி சேகரிக்கப்பட்டமை தொடர்பான எதிர்க் கட்சியினரின் குற்றச்சாட்டுகளுக்கும் மீண்டும் ஒருமுறை அவர் மக்களிடம் மன்னிப்புக் கோரினார்.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி நாளை மினிபஸ்கள் சேவையிலீடுபடாது

## அரச அதிபரிடம் மகஜரும் கையளிக்கப்படவுள்ளது

சிற்றூர்திகள் துறைசார்ந்த பணியாளர்கள் பாதுகாப்பை உறுதி செய்யக்கோரி - யாழ். மாவட்ட சிற்றூர்தி உரிமையாளர்கள் அரச அதிபர் செ.பத்மநாதனிடம் மகஜர் கையளிக்கவுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் -

கடந்த 13 ஆம் திகதி சுழிபுரம் சந்திக்குச் சமீபமாக ஏற்பட்ட எதிர்பாராத சிற்றூர்தி விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டதைக் காரணமாக வைத்து, சம்பந்தப்பட்ட சிற்றூர்தி 20 இற்கும் மேற்பட்ட பொலிஸார் முன்னிலையில் சில விஷமிகளினால் தீ வைத்து அழிக்கப்பட்டது.

இந்தச் செயலானது யாழ். மாவட்ட சிற்றூர்தி உரிமையாளர்கள் மத்தியில் விசனத்தையும், கடும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அரச பாதுகாப்பையும் சந்தேகம்கொள்ள வைக்கிறது.

விபத்து நடக்கும் இடங்களில் சம்பந்தப்பட்ட சிற்றூர்திகளை சட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அமைவாக நகர்த்தாது செயற்படும் செயலை, சில சக்திகள் தமக்குச் சாதகமாக்கி இந்தச் சிற்றூர்தியை மட்டும் சேதப்படுத்துவது, அல்லது அழிப்பது மட்டுமல்லாது சாரதி மற்றும் நடத்துனரைத் தாக்குவதும் பழியுணர்வுடன் நடந்துகொள்வது கண்டிக்கத்தக்கது.

காலப் போக்கில் இந்தச் சிற்றூர்திகளும், சாரதி, நடத்துனர்களும் பாதுகாப்பற்ற ஓர் நிலைக்கு ஆளாகும் பரிதாப நிலைக்காளாகி வருவதும் தவிர்க்கமுடியாததாகி விடுகிறது.

இந்தத் துர்ப்பாக்கிய நிலையை நீக்கி, சிற்றூர்திகள் துறைசார் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யக்கோரி, நாளை யாழ். மாவட்ட சிற்றூர்தி உரிமையாளர்கள் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளனர். இதனை முன்னிட்டு யாழ். சிற்றூர்திச் சேவைகள் யாழ். மாவட்டத்தில் நாளை நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிபார்சுகளுக்கு வேலைவாய்ப்பு; நடைமுறைக்கு முற்றுப்புள்ளி!

அமைச்சர்களின் சிபார்சுக் கடிதங்களுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைக்குப் புதிய அரசு முற்றுப்புள்ளி வைக்கும் என்று அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

அரசியல் தலையீடுகள் இன்றி தகுதியானவர்களை அரசாங்க நிறுவனங்களில் ஆட்சேர்க்கவுள்ளதாக அவர் கூறினார்.

பொதுத் தேர்தல் சமயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்த கருத்துக்களை பொய்யாக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# எரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளர் கைதானார்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனோகராச் சந்தியில் இனந்தெரியாத நபர்களால் தீயிட்டு எரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஐந்து சந்தியைச் சேர்ந்த பாக்கியராசா விஸ்ணுகாந்தன் (வயது 29) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக அவர் தெரிவிக்கையில் - நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் வில்லூண்டி கோவிலுக்கு சென்று கொண்டிருந்த சமயம், நான்கு, ஐந்து பேர் கொண்ட குழுவொன்று என்னை பலமாக தாக்கிவிட்டு, மோட்டார் சைக்கிளை மனோகராச் சந்தியில் போட்டு தீயிட்டு எரித்ததுடன் என்னையும் அண்மையில் உள்ள குப்பை மேட்டில் தூக்கி எறிந்தனர்.

நான் தப்பிச்சென்று அயல் வீட்டுக்காரரிடம் தஞ்சம் புகுந்தபோது அவர்கள் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்தனர். விரைந்து வந்த பொலிஸார் என்னை அழைத்து சென்றனர் எனத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின்போது கைது செய்யப்பட்ட மேற்படி நபர், அடி காயங்களுக்கு உள்ளான காரணத்தினால் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழைச்சேனையில் ஒருவர் கைது

வாழைச்சேனையில் 120 ஜெலிக்னைட் குச்சிகளுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமக்குக் கிடைத்த தகவலையடுத்து வர்த்தகப் பிரமுகர் ஒருவரின் இல்லத்தில் சோதனையிட்டபோது 130 கிலோ கிராம் எடையுள்ள இந்த வெடிபொருட்கள் சிக்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மதுபோதையில் தனக்குத் தானே பெற்றோல் ஊற்றித் தீ வைப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் தன்மீது பெற்றோலை ஊற்றி எரித்துக்கொண்ட சம்பவத்தில், எரிகாயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம் 7 ஆம் ஒழுங்கை கொட்டடிப் பகுதியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தின்போது 58 வயதான அ.நடராஜா என்ற குடும்பஸ்தரே எரிகாயங்களுக்கு உள்ளானவராவர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மேற்படி நபர் மதுவை அருந்திவிட்டு கொட்டடியில் உள்ள தனது வீட்டுக்கு சென்று பெற்றோலை தன்மீது ஊற்றி தனக்குத் தானே தீவைத்துக் கொண்டார். நபர் எரிவதனைப் பிள்ளைகள் கண்டு தண்ணீரை ஊற்றி உடலில் பற்றிய தீயை அணைத்தனர்.

தீக்காயங்களுக் உள்ளானவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# நெதர்லாந்து தூதுக்குழு மட்டக்களப்புக்கு விஜயம்

நெதர்லாந்து தூதுக் குழுவினர் நேற்று மட்டக்களப்பிற்குச் சென்று மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்து பல்வேறு தரப்புக்களுடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

நேற்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் என்.புண்ணியமூர்த்தியைச் சந்தித்து மட்டக்களப்பு அபிவிருத்தி குறித்து ஆராய்ந்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது மட்டக்களப்பில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அரச அதிபரிடம் தூதுவர்கள் கேட்டறிந்தனர். அத்துடன் நெதர்லாந்து தூதுக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் பொதுமக்களையும் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கண்ணிவெடி ஒழிப்பு...

குறிப்பாக இலங்கை அரசு கண்ணிவெடிப் பயன்பாட்டுக்கு எதிரான ஒட்டாவா உடன்படிக்கையில் கைச்சாத்திட அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டுமெனவும் இங்கு ஆலோசணைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அத்துடன், இனிவருங்காலங்களிலும் இரு தரப்பும் கண்ணிவெடிகளைப் புதைப்பதில்லையென்ற உறுதிமொழிகளை வழங்க வேண்டுமெனவும், போரில் கண்ணிவெடிப் பயன்பாட்டினை முற்றாக இல்லாதொழிக்க வேண்டுமெனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை - குடாநாட்டில் முன்னர் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவின் ரொங்கோ அமைப்பு தற்போது படையினருக்கான கண்ணிவெடி அகற்றல் பயிற்சிகளை வழங்கிவருகின்றது.

கண்ணிவெடிப் பயன்பாட்டிற்கு எதிரான ஒட்டாவா உடன்படிக்கையில் அமெரிக்க அரசு கைச்சாத்திடாத நிலையில், அந்த நாடு இங்கு இரட்டைவேடம் போடுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டன. (202)

# புதிய....

மான கலைஞர் கருணாநிதியை இக் குழுவினர் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தப்பேச்சுக்களின்போது - இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு, இந்தியாவின் புதிய அரசு சாதகமான முடிவுகளை எடுக்குமாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் ஊடாக கோரவுள்ளதாக பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

அத்துடன், மலையக மக்களின் அபிவிருத்திக்காகவும், இந்தியாவிடம் உதவி கோரவுள்ளதாகக் கூறினார்.

# பேச்சுக்களின்....

பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 19 ஆவது ஆண்டு...

இந்த நிகழ்வினை நெடுந்தீவு கரையில் இருந்து பெருந்திரளான மக்கள் உணர்வெழுச்சியுடன் பாத்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அதனைத் தொடர்ந்து நினைவாலயப் பகுதியில் உள்ள நினைவுத் தூபிக்கு மலரஞ்சலியும், நினைவுச் சுடர் ஏற்றலும் - நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், நெடுந்தீவு மக்கள் அமைப்பு பிரதிநிதிகளாலும் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கொலையுண்டவர்களின் நினைவுப் படங்களுக்கு அவர்களின் உறவினர்கள் கண்ணீர் மல்க சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

அடுத்ததாக நெடுந்தீவு தேசியப் எழுச்சிப்பேரவை செயலாளர் சு. கணேசலிங்கம் தலைமையில் நினைவு நாள் நிகழ்வுகள் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரன், ஈழவேந்தன், பல.நோ.கூ.சங்கத்தின் தலைவர் கனகலிங்கம், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் செல்வநாயகம் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள்.

பகல் 1.30 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக நெடுந்தீவு பிரதேச தலைவர் எ.அருந்தவசீலனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தன. (113)

# அமெரிக்க உதவியுடன்...

யில் செயற்படத்தொடங்கிய வர்த்தக சம்மேளனத்தின் வியாபாரக் கற்கை நெறிக்கல்லூரியில், வியாபாரக் கற்கைக்கான ஆங்கில நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கிறிஸ்ரீனா றொக்கா கலந்துகொண்டு நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்த நிலையத்தின் பயன்பாட்டிற்கென யு.எஸ்.எயிட் அமைப்பு 24 இலட்சத்து 55 ஆயிரம் இலங்கை ரூபாய் பெறுமதியான உபகரணங்களையும், தளபாடங்களையும் வழங்கியுள்ளது.

இந்த நிலையமானது கிழக்கு மாகாணத்தில் சர்வதேச தரத்திலான முதலாவது ஆங்கில மொழி மூலமான வர்த்தகக் கற்கைக்கான நிலையமாக அமைந்துள்ளது. இந்த நிலையத்தின் ஊடாக வருடாந்தம் 100 மாணவர்கள் முகாமைத்துவ, கணக்கியல் மற்றும் ஆங்கிலக் கல்வியை பெறவுள்ளனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் றொக்கா திருகோணமலையின் பொருளாதார அபிவிருத்திக்கு நன்கு பயிற்றப்பட்ட தொழிற்படை அவசியமானது.

இந்த கற்கை நிலையமானது அனைத்து சமூகத்தவர்களும், குறிப்பாக திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு பொதுவான ஓர் இடமாக அமையும்.

இதன்மூலம் அனைத்து சமூகத்தவரும் ஒன்றிணைந்து செயற்பட வாய்ப்பேற்படும். அதன் மூலம் அனைத்து சமூகங்களும் சமாதானத்தின் பலாபலன்களை அனுபவிக்ககூடியதாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

நேற்று மாலை 2.30 மணியளவில் யு.எஸ்.எயிட் அமைப்பின் ரூபா 17 இலட்சத்து 82 ஆயிரம் பெறுமதியான நிதிவழங்கலில் அன்பளிப்புச் செய்யப்பட்ட மீன் பிடி படகுகள் 5,அதற்கான வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் 8 தோணிகள் என்பன கஸ்தூரி நகர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு வழங்கும் நிகழ்விலும் றொக்கா முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு, படகுகள் மற்றும் தோணிகளை வழங்கினார்.

வன்முறையற்ற பேச்சுவார்த்தைகள் மூலமான சமாதானத்தை நோக்கிய முன்னெடுப்புக்களுக்கு ஊக்கமளிப்பதற்காக மூவின மாணவர்களுக்கும் என நடாத்தப்படும் செயலமர்வின் 2 ஆம்கட்ட பயிற்சியைப் பார்வையிடுவதற்கும் றொக்கா நேற்று மாலை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்திற்கு விஜயம் செய்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேர் இந்தப் பயிற்சிச் செயலமர்வில் பங்குபற்றுகின்றனர். தொடர்ந்து மாவட்டத்தின் உயர்தர வகுப்புக்களில் கல்விகற்கும் 600 இற்கு மேற்பட்ட மூவி மாணவர்களுக்கும் இதே பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளது.

செயற்திட்டத்திற்கெனவும், யு.எஸ்.எயிட் நிறுவனம் 26 இலட்சத்து 73ஆயிரம் ரூபா பெறுமதியான நிதியுதவியை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்திற்கு வழங்கியுள்ளது.

நேற்றுக்காலை திருகோணமலைக்கு விமானப்படை உலங்குவானூர்தி மூலம் வந்தடைந்த கிறிஸ்ரினா றொக்காவுடன், இலங்கைக்கான அமெரிக்க அரசின் தூதுவர் ஜெப்ரிலங்ஸ்ரீட் மற்றும் தூதரக செய்திப்பிரிவு பொறுப்பாளர் செல்வி கோடி டெய்லர் மற்றும் தூதரக அதிகாரிகள் பலரும் சென்றிருந்தனர்.

இதேவேளை, றொக்கா மாவட்டத்தின் அரச உயர் அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், தனிப்பட்ட முக்கியஸ்தர்களையும் சந்தித்து மாவட்டத்தின் பொதுவான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினர்.

நேற்று மாலை 4.30 மணிக்கு றொக்கா தலைமையிலான அமெரிக்க குழுவினர் திருகோணமலையிலிருந்து விமானப்படை உலங்குவானூர்தியில் கொழும்பு திரும்பினர். (10, 04)

# நேற்றிரவு கொழும்புக்கு...

ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஆட்சியில் இருந்தவேளை சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்காகவும், அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காகவும் ஜப்பான் தனது பிரதிநிதியாக யசுஷி அகாஷியை நியமித்திருந்தது. இதனடிப்படையில் அகாஷி சமாதான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

தற்போது புதிதாக ஆட்சியமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சூழல் ஏற்பட்டுள்ளதை அடுத்து அகாஷி கொழும்பு வந்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அடுத்து ஜனாதிபதி, பிரதமர், விடுதலைப் புலிகளுடன் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தவுள்ளார். இதேவேளை நாளை மறுதினம் அகாஷி வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம் பெறவுள்ளதாக நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் பின்னரும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரையும் சந்தித்து சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**தொலைபேசி இயக்குநர் தேவை**

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொலைபேசி நிலையத்திற்கு தொலைபேசி இயக்குநர் அல்லது பயிலுனர் தேவை இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்

தொடர்புகளுக்கு:
222 7638
0777 213953
(சி-2528)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.